# கிழக்கின் குரல்

(அரசியல் கட்டுரைகள்)



அறுமுக்குட்டிபோடி

தெங்கு பதிப்பகம்
மட்டக்களப்பு

# கிழக்கின் குரல்

(அரசியல் கட்டுரைகள்)

**அறுமுக்குட்டிபோடி**

தெங்கு பதிப்பகம்,

மட்டக்களப்பு

## நூற்தரவு


- நூல் : கிழக்கின் குரல்
- வகை : அரசியல் கட்டுரைகள்
- கட்டுரையாளர் : அறுமுக்குட்டிபோடி
- பதிப்புரிமை : ஆசிரியர்க்கே
- முதற்பதிப்பு : பங்குனி - 2020
- வெளியீடு : தெங்கு பதிப்பகம், மட்டக்களப்பு,
- பக்கங்கள் : 64
- விலை : 250/=

ISBN 978-624-96105-0- 7

# முகவுரை

இந்த நூலில் வரும் கட்டுரைகள் மட்டக்களப்பை, இலங்கையின் கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி பல விடயங்களைப் பேசுகின்றன. கிழக்கிலங்கையின் நலனை, அதன் தற்காலத் தேவைகளை, கிழக்கின் எதிர்காலத்தை மேம்படுத்தும் நோக்குடன் வெளிவந்தது எமது "அரங்கம்" பத்திரிகை. அதன் நோக்கத்தை உள்வாங்கி கிழக்கின் பலவிதமான அம்சங்களையும் அதில் பேசியவை இந்தக் கட்டுரைகள்.

குறிப்பாக கிழக்குத் தமிழர் அரசியலை, கிழக்கின் அபிவிருத்தியை, கிழக்கின் ஆளுமைகளை, கிழக்குக்காக உழைத்தவர்களை கிழக்கின் எதிர்காலத்தை பேசுகின்றவை இவை. அறுமுக்குட்டிபோடி அவர்கள் ஒரு சிறந்த கட்டுரையாளர். கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், உலக மட்டத்தில் பலவிடயங்களை ஆய்ந்து, அறிந்தவர். கிழக்கில் கிராமம், கிராமமாக அலைந்து அவற்றின் யதார்த்த நிலைமையை உணர்ந்தவர். உலக மற்றும் பிராந்திய நிலைமைகளை கருத்தில் கொண்டு கிழக்கு மாகாணத்தின் எமது மக்களின் தேவைகளை துல்லியமாக முன்வைப்பவர்.

எமது ஊரின் பிந்தங்கிய மக்களை, பிந்தங்கிய பகுதிகளைப் பற்றிய அவரது அறிவை இந்தக் கட்டுரைகள் பிரதிபலிக்கின்றன. எமது மக்களின் தற்கால அரசியல், பொருளாதார, சமூகத் தேவைகளை அவர் சிறப்பாக எதிரொலிக்கின்றார்.

எமது மாகாணத்துக்காக உழைத்தவர்களை அவர் நினைவுகூருகின்றார். எமது மாகாணத்தின் சில இலக்கிய ஆளுமைகள் குறித்தும் அவர் பேசுகின்றார். சில ஊர்களின் அவசரமான பிரச்சினைகளை கோடிட்டுக்காட்டுகின்றார் அறுமுக்குட்டிபோடி.

அவர் அறிந்த நிலைமைகள், அவரது கரிசனைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் முயல்கிறார். 30 வருடகால உள்நாட்டு யுத்தத்துக்குப் பிறகு, அதனால் அடிபட்டுப் போயிருக்கும் எமது கிழக்கு மாகாணத்தின் துரித அபிவிருத்திக்கு என்ன தேவை என்பதை அவர் கலந்துரையாட முயல்கிறார். கிழக்கின் தற்போதைய குறைகளில் ஒன்று, இங்குள்ள பிரச்சினைகளின் யதார்த்தங்களை உயர்த்திப் பேசும் ஆட்களின் பற்றாக்குறை. அதனை அறுமுக்குட்டிபோடி போன்ற எழுத்தாளர்கள்தான் நிவர்த்தி செய்தாகவேண்டும்.

உண்மையில் "அரங்கம்" பத்திரிகை கிழக்கில் செய்ய முயன்ற விழிப்புணர்வுக் கான முயற்சிகளில் இந்த கட்டுரைகளின் பங்களிப்பு கணிசமானது. அவரது கட்டுரைகள் நூலுருப்பெறுவது மிக்க மகிழ்ச்சியை தருகின்றது. அரங்கம் பத்திரிகையின் பணிகள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதாக இதன் மூலம் உணர்கிறோம்.
2019ம் ஆண்டின் இறுதி ஆறுமாதங்களில் வெளிவந்த அரங்கம் பத்திரிகையில் அறுமுக்குட்டிபோடியால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இது.

"கிழக்கின் குரலாக" இந்தக் கட்டுரைகள் நிச்சயமாகத் திகழும். "தெங்கு" பதிப்பகத்துக்கு எமது நன்றிகள். கிழக்கு மக்களின் தேவைகள் அனைவராலும் உணரப் படட்டும். அவர்கள் சுபீட்சமான வாழ்வை அடையட்டும்.

அன்புடன்

**சீவகன் பூபாலரட்ணம்**

ஆசிரியர் - அரங்கம் பத்திரிகை

## பொருளடக்கம்


1. “வாழும் மனிதம்” நல்லையா வரலாற்று ஆவணம் –நூலறிமுகம்
2. சோறுடைத்த சோழர்கள் மீது சேறடித்தாரா இயக்குனர் ரஞ்சித்?
3. தமிழரசு கட்சியின் 16வது தேசிய மாநாடு

   சொல்லும் செய்திகளும் சொல்லாத செய்திகளும்
4. உன்னைச்சொல்லி குற்றமில்லை பண்டாரநாயக்கா!
5. அமிர்தலிங்கம் நினைவுதினம்
6. இல்மனைட் அரசியல்
7. ஹிஸ்புல்லா... உன்னால் ஒரு சேதி
8. "கிழக்கை மீட்போம்" யார்,யாரிடமிருந்து மீட்பது?
9. இராஜேஸ்வரி பாலசுப்ரமனியம் – 'லண்டன்–95'
10. வதங்கிடுமே வாழைச்சேனை– பெருகிவரும் ஐஸ் தொழிற்சாலைகள்
11. ஜனாதிபதி தேர்தல் 2020 யாரிந்த ஜேவிபியினர்
12. பழிவாங்கும் மனநிலையில் தேர்தலை அணுகலாமா?
13. மலையகமும் நல்லாட்சியும் கற்றுத்தரும் பாடம்
14. கிழக்கின் வழி தனி வழியாக இருக்க வேண்டும்
15. ஜனாதிபதி தேர்தலையொட்டி கல்லடியில் மையம்கொள்ளும் மாற்றம்

# "வாழும் மனிதம்" நல்லையா வரலாற்று ஆவணம் –நூலறிமுகம்

கி ழக்கிலங்கையில் இருந்து தேசிய அளவில் கால்பதித்த மிகப்பெரும் ஆளுமை யாரென்றால் எமெக்கெல்லாம் உடனடியாகவே ஞாபகம் வருவது முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் பெயரே ஆகும்.

அவரது வரலாறு, அவரது செயல்பாடுகள், அவரது சாதனைகள் என்று எதுவுமே இதுவரை அதேபோன்று விபுலானந்தருக்கு பிறகு கிழக்கு மண் பெற்றெடுத்த மிகப்பெரும் ஆளுமை வி.நல்லையா மாஸ்டர்தான் என்றால் அறிவு புலத்தில் அதை மறுப்பார் யாருமிலர். ஆவணப்படுத்தப்படவில்லை. இது ஒரு குறைபாடு மட்டுமல்ல தமிழரின் வரலாற்றெழுத்தியலில் ஒரு மாபெரும் கறையுமாகும். அதிகாரங்களை வைத்திருப்பவர்களே வரலாறுகளை தீர்மானிப்பவர்களாக இருக்கின்றார்கள் என்பதனாலோ என்னவோ "மட்டக்களப்பின் நவயுக சிற்பி" என்று புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் புகழப்பட்ட அந்த நாயகன் நல்லையா அவர்களின் வாழ்வு இன்றுவரை தமிழ் சூழலில் ஆவணமாக்கப்படவில்லை.

ஆனால் நல்லையா மாஸ்டர் இறந்து சுமார் நாற்பது வருடங்களுக்கு பின்னராவது அந்த வடு இப்போது துடைக்கப்பட்டிருக்கின்றது. அமரர் நல்லையா நினைவு பணி மன்றத்தினரின் அயராத உழைப்பு "வாழும் மனிதம்' என்னும் தலைப்பில் அதனை சாத்தியமாக்கியுள்ளது. சுமார் 235 பக்கங்களில் விரிகின்ற இந்த நூல் அரிய பல தகவல்களடங்கிய ஒரு வரலாற்று ஆவணமாக வெளிவந்துள்ளது.

சுமார் 15 பெறுமதிமிக்க கட்டுரைகள், 09 நினைவுக்குறிப்புக்கள், பாராளுமன்ற உரைகள், மற்றும் நிழல் படங்கள் என மிக கனதியானதொரு தொகுப்பாக இந்நூல்

தொகுக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கும் வார்த்தைக்கும் இல்லாத வசீகரமும் பன்முக பரிமாணமும் மட்டுமல்ல காலப்பெருவெளியின் மிகநுண்ணிய கணங்களைக்கூட இழுத்துவந்து எம் கண்முன்னே கொண்டு நிறுத்தும் அசாத்திய சக்தியும் கூட நிழல்படங்களுக்கேயுண்டு . அந்த வகையில் இத்தொகுப்பின் இறுதியில் சுமார் 35 பக்கங்களுக்கு மேல் இடம்பிடித்திருக்கும் நிழற்படங்கள் பேசுகின்ற வரலாறுகள் அலாதியானவை.

திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் பள்ளியின் ஆசிரியப்பணியில் தொடங்கிய அவரது பொதுவாழ்வு மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முதலாவது அதிபர் என்று கிழக்கிலங்கையெங்கும் எவ்வகையில் வியாபித்தது? இராமகிருஷ்ண மிஷனுடன் அவருக்கிருந்த ஈடுபாடுகள் எப்படியானவை? ஆசிரியராக இருந்த நல்லையா அவர்கள் அரசியலில் கால்பதிப்பதன் ஊடாக பெரும் பணியாற்ற முடியும் என்று அவருக்கு ஆசி வழங்கிய துறவி விபுலானந்தரின் தூரநோக்கு பற்றிய பல தகவல்கள் இக்கட்டுரைகளில் காணக்கிடக்கின்றது.

முதல் முதலாக மட்டக்களப்பு நகரசபை உறுப்பினராக தெரிவானதோடு தனது அரசியல் வாழ்வில் காலடிவைத்த நல்லையா மாஸ்டர் கிழக்கிலங்கையின் (வடக்கு பகுதி) சார்பான அரச சபை (செனட்) உறுப்பினராகி பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதியமைச்சராக. அமைச்சராக என்று அரசியல் வானில் உச்சம் வரை பிரகாசித்துள்ளார். தான் வகித்த ஒவ்வொரு பதவியிலும் அவர் பெருமை யடைந்தாரோ இல்லையோ அந்த பதவிகள் அவரால் பெருமையடைந்தன என கூறும் அளவிற்கு புகழடைந்திருக்கின்றன. அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக ரிச்சர்ட் நிக்ஸன் இலங்கைக்கு வருகைதந்த வேளையில் அன்றைய பிரதமர் சேர்.ஜோன்.கொத்தலாவலையின் பிரதிநிதியாக நல்லையா அவர்களே விமான நிலையம் சென்று அவரை வரவேற்றிருக்கின்றார் என்கின்ற தகவல்களெல்லாம் இலங்கை அரசியல் அதிகார மையங்களில் அவர் செலுத்திய ஆளுமையை பறைசாற்றி நிற்கின்றன.

ஐ நாவில் பேசிய முதல்தமிழன், ஐ நாவில் பேசிய கடைசி தமிழன் என்கின்ற தமிழ் வரலாற்று புனைவுகளால் நிரம்பிக்கிடக்கின்றன எமது செவிப்பறைகள். இந்த ஆலாபனைகளையெல்லாம் கேலிகூத்தாக்கிவிட இத்தொகுப்பில் காணப்படுகின்ற ஒரேயொரு புகைப்படமே போதுமானதாயிருக்கின்றது. 1951ம் ஆண்டிலே இலங்கை நாட்டின் பிரதிநிதியாக ஐநாவில் அமர்வில் பங்கெடுத்து உரையாற்றிய இந்த மட்டக்களப்பு நல்லையாவின் அந்த அரிய புகைப்படம்தான் இந்த தொகுப்புக்கே முத்தாய்ப்பாய் அமைந்திருக்கின்றது.

அதிகாரம் தன்னிடமிருந்த ஒவ்வொரு கணநேரமும் அவர் எப்படி அதை

மக்களுக்காக பயன்படுத்தினார் என்பதை இந்நூலில் காணப்படுகின்ற கிழக்கிலங்கை எங்கும் அவர் ஆற்றிய பணிகளின் பட்டியல்கள் எடுத்தியம்புகின்றன. வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை தொடங்கி மட்டக்களப்பு மாநகர மண்டபம், பிரதான தபால் அலுவலகம், மாவட்டத்தில் காணப்படுகின்ற பெரும்பாலான வைத்திய சாலைகள் மற்றும் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் (தற்போதைய கிழக்கு பல்கலைக்கழகம்), மட்/கோட்டைமுனை மகாவித்தியாலயம்(தற்போதைய மட்/ இந்துக்கல்லூரி . வாழைச்சேனை மகா வித்தியாலயம் (இன்றைய வாழை / இந்து கல்லூரி)திருகோணமலை மகா வித்தியாலயம்(இன்றைய இந்துக்கல்லூரி) .-----என்று கிழக்கிலங்கை எங்கும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்க பாடசாலைகளின் ஸ்தாபகராகவும், நல்லையா என்கின்ற இந்த ஒரே மனிதனே செயல்பட்டிருக்கின்றான் என்னும் தகவல்களை வாசிக்கின்றபொழுது யாருக்கெல்லாம் சிலையெழுப்பி கொண்டாடும் நாம் இந்த மனிதனுக்கு மட்டக்களப்பு நகரின் மத்தியில் இன்றுவரை ஒரு சிலை எழுப்பி கொண்டாட வில்லையே? என்கின்ற வேதனையை தவிர்க்க முடியவில்லை. .

அதுமட்டுமல்ல குளங்களின் புனரமைப்பு ஆகட்டும். நீர்ப்பாசன திட்டங்கள் ஆகட்டும் குடியேற்ற திட்டங்கள் ஆகட்டும் இன, மத, சாதி பேதமின்றி அவரது செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. போடிமார்களால் ஒடுக்கப்பட்டு நிலமின்றி வாடிய ஏழை சமூகங்களின் மீட்பராக அவர் உருவாக்கிய விசேட குடியேற்ற திட்டங்கள் இருந்திருக்கின்றன. தேசிய உடமையாக்கல் கொள்கைகளோ, நெற்காணி உச்சவரம்பு சட்டங்களோ அமுலாக்கபடுவதற்கு முன்பே விசேட பிரேரணைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பெரும் நிலச்சுவான்தர்களிடமிருந்து நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி அவற்றை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் கைங்கரியத்தை செய்திருக்கின்றார் என்றால் அவர்கொண்டிருந்த பொதுவுடைமை கொள்கைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை. அவ்வாறாக முஸ்லிம் மற்றும் பறங்கிய சமூகங்களுக்கென விசேட குடியேற்ற, வீடமைப்பு திட்டங்களை உருவாக்கியது மட்டுமன்றி பள்ளிவாசல்களைக்கூட கட்டித்தந்த பெருமானார் நல்லையா மாஸ்டர் என்று இன்றும் வாழக்கூடிய முஸ்லிம்களின் மூத்த பிரசைகள் இந்நூலில் பதிவு செய்திருகின்றனர்.

மேலும் மட்டக்களப்பு வாழ் முஸ்லிம்களின் வாக்குவங்கியானது நல்லையாவைத் தவிர வேறு யாருக்குமானதாய் இருக்கவில்லை என்கின்ற தகவல்கள் கிழக்குமாகாணம் கொண்டிருந்த இனநல்லிணக்க வரலாற்றின் சாட்சியமாய் இந்நூலினை இன்னுமொரு பரிமாணத்துக்கு இட்டு செல்கின்றது.

இலவச கல்வியை சனநாயகப்படுத்தலின் அவசியம் பற்றியும் சுயபாஷைகளுக்கான விவாதங்களின் போதும் தமிழையும் அரசகரும மொழியாக இணைத்துக் கொள்ளவேண்டியதன் அவசியம் பற்றியும் . அவர் ஆற்றிய உரைகள் இலங்கையின்

பாராளுமன்ற வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழ் "பெருங்குடிகள்" வழிவந்த தலைவர்களெல்லாம் மக்கள் நலத்திட்ட மசோதாக்களை எதிர்த்துகொண்டும் சுதேச மொழி பிரேரணையை எதிர்த்துக்கொண்டும் ஆங்கிலம் அகற்றப்படக்கூடாது என்று ஒற்றைக்காலில் நின்றபோது சுயபாஷைகளின் அவசியம் குறித்து அவர் முன்வைத்த வாதங்களும் அவற்றை எடுத்துரைக்கும் விதமும் தனித்துவமானவையாகும். அதனை இந்நூலில் காணக்கிடைக்கின்ற அவரது உரைகளின் பந்திகள் எடுத்தியம்புகின்றன.

அதுமட்டுமன்றி தமிழரசு கட்சியினரினதும் யாழ்ப்பாண தலைவர்களினதும் இனவாத அணிதிரட்டல்கள் பாரிய அவலநிலை ஒன்றை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு தமிழ் மக்களை இட்டுச்செல்லும் என்பதனை சுமார் 70வருடங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக இந்த மனிதன் அழுத்தி பேசியிருக்கின்றான் என்பதை இந்த நூலில் காணப்படும் அவரது உரைகள் தெள்ளத்தெளிவாக காட்டுகின்றன.

1945ம் ஆண்டுகளில் தமிழர் வாழும் பிரதேசங்களில் இருந்த தீண்டாமைக்கொடுமைகள் சொல்லிலடங்காதவையாகும். ஆனால் அவ்வேளையில் அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் திரள் குறித்து மிக கருசனைகொண்ட உரைகளை அவர் பாராளுமன்றில் ஆற்றியுள்ளார். "ஒடுக்கப்பட்ட சாதிகளான கட்டாடிகள், சிகைவெட்டுவோர், கூலியாட்கள் என்போருக்கெல்லாம் ஓய்வூதியம் கொடுப்பது அரசின் கடமை" என்று குரல் எழுப்பியவர் இந்த மட்டக்களப்பு நல்லையா மட்டுமேதான் என்றால் அது மிகையாகாது. இதே போன்று மலையக மக்களின் நிலை குறித்து மிக வேதனையுடன் அவர் சபையின் கவனத்தை ஈர்க்கும் உரைகளை ஆற்றியுள்ளார். வெற்று வீம்புகளும் வீரபிரதாபங்களும் பேசி பேசியே எத்தனையோ தமிழ் தலைமைகள் அறுபது எழுபது வருட காலங்களை வீணடித்து வருகின்ற நிலையில் வெறும் பதின்மூன்று வருடங்கள் மட்டுமே அதிகாரத்தில் இருந்த நல்லையா மாஸ்டர் இத்தனையையும் சாதித்திருக்கின்றார் என்பது அதிசயமே.

மேலும் இந்த நல்லையா மாஸ்டர் பற்றி மட்டக்களப்பின் மூதறிஞர் எஃப். எக்ஸ்.சிநடராஜா அவர்கள் கலைச்செல்வி சஞ்சிகைக்கு 1994ல் வழங்கிய பேட்டியும் இந்நூலில் இணைக்கப்பட்டிருப்பது சிறப்பானதாகும். அதில் அவர் நல்லையா மாஸ்டரை விளிக்கின்ற விதம் அற்புதமானது. ஆம் அவர் சொல்வதுபோல "நல்லையா ஒரு கையூட்டு வாங்காத மெய்யாளனாக"வாழ்ந்திருக்கின்றார். இலங்கை அரசியல் வானில் உச்சநிலை தலைவர்களில் ஒருவராக இருந்த போதும் எத்தனையோ கோடி கோடியாக ரூபாய்களை மக்களின் சேவைக்காக கையாண்டபோதும் தனது இறுதிக் காலங்களில் ஒரு ஏழையாக வாடகை வீடொன்றில் வாழ்ந்து மறைந்திருக்கின்றார் அந்த தலைவர் என்பதை இந்நூல் தொகுக்கப்படாவிடின் இன்றைய தலைமுறையினர் அறிய வாய்ப்பில்லை.

இந்த ஆவண தொகுப்பு போல நல்லையா மாஸ்டரின் பாராளுமன்ற உரைகளும் எதிர்காலத்தில் முழுமையான நூலுருப் பெறவேண்டும். அவ்வாறு வருகின்ற போது எதிர்காலத்தில் அரசியல் தலைவர்களாக வரும் எமது இளம் சந்ததிகளுக்கு அது ஒரு சிறந்த கையேடாக இருக்கும் என்பது நிச்சயம்.

இறுதியாக இந்நூலின் பதிப்பாசிரியராக இருந்து இந்த வரலாற்று கடமையை திறம்பட செய்து முடித்திருக்கும் கவிக்கோ வெல்லவூர் கோபால் அவர்களையும் நல்லையா நினைவுப்பணி மன்றத்தாரையும் மன்றத்தின் ஆயுள்கால காப்பாளர் திருமதி நளினி காசிநாதன் அவர்களையும் பாராட்டாமல் இந்த குறிப்புகளை நிறைவு செய்ய முடியாது. அவர்களுக்கு "என்றும் ஒரு அரசியல். வரலாற்று மாணவனாக நின்று" நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்..

# சோறுடைத்த சோழர்கள் மீது சேறடித்தாரா இயக்குனர் ரஞ்சித்?

"சோழ வளநாடு சோறுடைத்து" என்பது ஔவையார் வாக்கு. அதாவது காவிரியாற்று படுகையில் அமைந்த சோழர்களின் நாடு செல்வம்கொழிக்கும் வளநாடாய் திகழ்ந்தமை பற்றிய பாட்டு அது.

அத்தகைய சோழ சாம்ராஜ்சியத்தின் சக்கரவர்த்தி இராஜராஜ சோழனை பற்றி திரைப்பட டைரக்டர் ரஞ்சித் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் நாட்டில் மிகப்பெரிய அதிர்வலைகளை உருவாக்கியுள்ளன. கூட்டமொன்றில் பேசியபோதே டைரக்டர் ரஞ்சித் இத்தகைய கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அதாவது "சோழர் ஆட்சி என்பது ஒரு இருண்டகாலம்". "இராஜராஜ சோழனது ஆட்சிக்காலத்திலேதான் சாதிய ஒடுக்குமுறைகள் பலம் பெற்றன". "சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டன". "தேவதாசிமுறைகள் பெரு வளர்ச்சி பெற்றன" என்றவாறாக குற்றச்சாட்டுக்களை வரிசைப்படுத்தியுள்ளார். ரஞ்சித்தின் இந்த உரையானது சரியானதா? பிழையானதா? வரலாற்று ஆதாரங்களை கொண்டதா? என்றெல்லாம் சூடான வாதப்பிரதிவாதங்கள் தமிழ் பரப்பில் அள்ளிவீசப்படுகின்றன.

அவை ஒருபுறமிருக்க அவரது பேச்சு சோழர்கள் மீது தமிழ்ச்சமூகம் கொண்டிருக்கும் வரலாற்று பெருமையை சற்று ஆட்டங்காண செய்துள்ளது என்பது முக்கியமானது. இதன் காரணமாக அவர் மீது காரசாரமான எதிர் விமர்சனங்கள் வைக்கப்படுவது மட்டுமன்றி அரசு தரப்பிலிருந்து அவர்மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றில் சோழ மன்னர்களின் பாத்திரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சங்க காலம் தொடக்கம் தமிழ்நாட்டின் பல பகுதிகளை இந்த சோழர்கள் ஆண்டு வந்துள்ளனர். கிறிஸ்துவுக்கு முற்பட்ட மௌரிய பேரரசர் அசோகன் காலத்து கல்வெட்டுக்களில் கூட தென்னிந்திய சோழமன்னர்கள் பற்றிய குறிப்புகளுண்டு. சங்ககால இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை கூட சோழமன்னர்கள் பற்றிய கதைகளால் நிறைந்தவையாகும்.

தென்னிந்தியாவை சேரர்கள், பாண்டியர்கள், முத்தரையர்கள், களப்பிரளர்கள், பல்லவர்கள் என்கின்ற வேறு பல மன்னர் பரம்பரைகளும் ஆட்சி செலுத்தி வந்துள்ளன. ஆனபோதிலும் சோழ மன்னர்களின் வரலாறு நீண்ட வரலாற்று பாரம்பரியம் மிக்கதாகும். இதில் சோழ சாம்ராட்சியம் எனப்படுவது பிற்கால சோழராட்சியே ஆகும். இது தொடர்ச்சியான சுமார் நான்கு நூற்றாண்டுகள் அதாவது 430 ஆண்டுகள் பிரமாண்டமான வரலாற்றைக் கொண்டது. இந்தச் சோழ சாம்ராஜ்சியமானது 850ஆம் ஆண்டு தொடங்கி 1279ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தது. இந்த சாம்ராட்சியத்தின் அடையாளமாகவே இராஜராஜ சோழன் என்பவன் திகழ்கின்றான். இவனது ஆட்சிக்காலம் 985-1014 வரையானதாகும். இராஜராஜ சோழனும் அவனது மகனான இராஜேந்திர சோழனும் சேரநாடு, பாண்டியநாடு, மற்றும் இலங்கை போன்றவற்றை வென்று கொடிநாட்டினர். இலங்கையில் பொலன்னறுவையை தலைநகராக கொண்டு சோழராட்சி நிலைகொண்டிருந்தது.

தென்னிந்தியாவை மட்டுமன்றி வடக்கு நோக்கி ஒரிசாவையும் தாண்டி பாடலிபுரம் (இன்றைய பீகார்) போன்ற பல பகுதிகளை வென்றனர். ஜாவா, சுமத்ரா, மலேசியா (கடாரம்) என்று தென்கிழக்காசியாவின் பல நாடுகளுக்கும் படையெடுத்துச் சென்று சோழராட்சியை நிறுவினார்கள். இதன்காரணமாகவே 'கங்கை கொண்டு கடாரம் வென்ற சோழன்' என பெயர்பெற்றான் இராஜராஜன்.

இராஜராஜ சோழன் ஆட்சியில்தான் முதன் முதலாக நிலங்களை அளந்து கணக்கிடும் முறை உருவானது. குடவோலை எனப்படுகின்ற வாக்களிக்கும் முறையூடாக மக்களை வாக்களிக்க செய்து உள்ளூராட்சி நிர்வாகத்தை தெரிவு செய்கின்ற ஜனநாயக பாரம்பரியத்தை உருவாக்கியவன் இந்தச் சோழனே. மிகப்பெரிய நீர்த்தேக்கங்கள், தஞ்சை பெருங்கோவில் போன்ற பிரமாண்டமான ஆலயங்கள் போன்றவற்றை நிர்மாணித்து தமிழரின் தொன்மையான தொழில் நுட்ப அறிவை உலகறியச்செய்தவன் இராஜராஜனே. படை நடத்துவதில் மட்டுமன்றி கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், தொழில் நுட்பம் போன்ற அனைத்து துறைகளிலும் பெயர் பொறித்த ஆட்சி முறையை தந்தவன் சோழன் என்கின்ற சாதனைகளே வரலாற்றில் முன்னிறுத்தப்பட்டு வந்துள்ளன.

இந்த வரலாற்றுப் பெருமிதங்கள் மட்டுமே கதைகளாகவும், சினிமாக்களாகவும்,

பள்ளிப் பாடங்களாகவும், பரம்பரை பரம்பரையாக எமக்கு சொல்லித்தரப்பட்டு வருகின்றன. சோழ மன்னர்களின் வரலாற்று பெருமைகளோ இராஜராஜ சோழனின் சாதனைகளோ யாராலும் மறுக்கப்படுவதற்கில்லை. ஆனால் எழுதப்பட்ட வரலாறுகள் என்பது ஆதிக்கசக்திகளின் வரலாறுகளாகவே இருக்கும் என்பதுதான் நியதி.

அப்படிப் பார்க்கின்றபோது சோழர்கள் போன்ற பெருமன்னர்களின் வரலாறுகளாக எமக்கு கிடைக்கின்ற கல்வெட்டுக்களும், அல்லது இலக்கிய பதிவுகளும் அந்தந்த மன்னர்களாலும் மன்னர்களுக்காகவுமே எழுதப்பட்டன. அதில் ஒருபோதும் அவர்களின் மறுபக்கங்களை அவர்கள் எழுதி வைக்கமாட்டார்கள். தங்கள் அருமை பெருமைகளை பேசுவதற்காகவே அவர்கள் கல்வெட்டுக்களை உருவாக்கினார்கள். புலவர்களை பொன்னும், மணியும், பொற்கிழியும் வழங்கி போஷித்தார்கள். எனவே இந்த வரலாறுகள் ஒரு போதும் அவர்களது தவறுகளையோ, பிழைகளையோ அவர்களால் பாதிப்புற்ற மக்கள் கூட்டத்தின் மனவேதனைகளையோ பேசுவதில்லை. ஆனாலும் வரலாற்று ஆய்வாளர்கள் என்பவர்கள் அந்த வரலாற்று தடயங்கள் சொல்லவருகின்ற விடயங்களை மொழிபெயர்ப்பது, அல்லது ஒப்புவிப்பது மட்டுமன்றி அவற்றில் மறைந்திருக்கக்கூடிய சொல்லாமல் விடப்பட்ட விடயங்களை நுணுகி ஆராயவேண்டிய தேவைகள் உண்டு. அப்படியான தேடல்கள்தான் வரலாற்றின் முழுமையான பக்கங்களை புதிய தலைமுறையினர் தரிசிக்கும் வாய்ப்புகளை வழங்கும். எனவே இந்த பெருமைகளையும் சாதனைகளையும் ஒரு புறம் வைத்துவிட்டு ஜனநாயக தன்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் வரலாற்றை நாம் அணுகி ஆராய்கின்ற போதுதான் அதன் மறுபக்கங்களை காணமுடியும்.

**சமஸ்கிருதம்**

சோழராட்சிக்காலத்தில் பூசை மொழியாக சமஸ்கிருதம் நிரந்தரமாக்கப்பட்டது என்பதில் ஒரு தமிழனாக நாம் பெருமைகொள்ள ஏதும் இல்லை. அருள்மொழித்தேவன் தனது சொந்தப்பெயரையே இராஜராஜன் என்று சமஸ்கிருதத்தில் புனைந்துகொள்ளும் அளவிற்கு பிராமணமயமாக்கல் இடம்பெற்றமை நமக்கு பெருமையல்ல, சிறுமையே. சோழர்காலக் கல்வெட்டுகளில் வலங்கைச்சாதி, இடங்கைச்சாதி என்று தலா 90 சாதிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு தீண்டாச்சேரி, பறைச்சேரி என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருகின்றன. ஆகவே சாதிவாரியாக சேரிகளும், ஊர்களும் வெவ்வேறு வாழ்விடங்களாக அமைக்கப்பட்டிருந்த ஆட்சிமுறை போற்றத்தக்கதொன்றா?

பென்னம்பெரிய ஆலயங்களை சோழன் உருவாக்கினான். அவற்றை நிருவகித்த பிராமணர்களுக்கு பிரமதேயங்களை வழங்கினான் என்கின்ற வரலாறுகளின்

பின்னணியில் பாரிய சமூக பொருளாதார மாற்றங்கள் நடந்திருக்கின்றன. பூர்வ குடிகளுக்கு மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. அக்காலங்களில் நிலங்கள் பொதுச் சொத்தாகவே காணப்பட்டன. அங்கு வாழ்ந்துவந்த விவசாயக்குடிகளின் வளமான நிலங்களை பறித்தெடுத்தும், அவர்களை துரத்தியடித்துமே பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டன. இதற்காகவே முதன்முதலாக நிலங்களை அளந்தும், பிரித்தும் எல்லையிடும் முறையை சோழன் உருவாக்கினான். இதில் "உலகளந்தான் சோழன்" என்று பிராமணர்கள் பெருமைகொண்டனர். இன்றுவரை தமிழ்நாட்டில் காணப்படுகின்ற ஆலயங்களின் பெயரிலும் மடங்களின் பெயரிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருப்பதற்கான அடிப்படைக்காரணம் இதுவேயாகும். ஆண்டாண்டு காலமாக இவற்றை அனுபவித்து வரும் எங்கிருந்தோ வந்த பிராமணர்களுக்கும் மேட்டிமைச்சாதியினருக்கும் பிரமதேயங்களை உருவாக்கிய சோழராட்சிக்காலம் ஒரு பொற்காலமாகவே இருக்கும். அதேவேளை பூர்வ குடிகளாக இருந்து நிலமற்றவர்களாக மாற்றப்பட்டு, இன்றுவரை கூலிகளாகவும், குடிமைத்தொழிலாளிகளாகவும் வாழும் ஆதிதிராவிடர்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அது இருண்ட காலமே. இதன் வெளிப்பாடே ரஞ்சித் போன்றவர்கள் இன்று எழுப்புகின்ற கேள்விகளாகும்.

# தமிழரசு கட்சியின் 16 வது தேசிய மாநாடு சொல்லும்செய்திகளும் சொல்லாத செய்திகளும்

தமிழரசு கட்சியின் 16 வது தேசிய மாநாடு (30/06/2019 )அன்று யாழ்-வீரசிங்கம் மண்டபத்தில் நடந்து முடிந்துள்ளது. வழமைபோலவே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சுமார் எழுபது ஆண்டுகால வரலாற்றைக்கொண்ட தமிழரசுக்கட்சியானது 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி யாழ்-மாவட்டபுரத்தில் உதயமானது. மலேசியாவில் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் இக்கட்சியின் ஸ்தாபகராவார். அதுவரைகாலமும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் இயங்கிய தமிழ் காங்கிரஸ் என்கின்ற கட்சியில் இருந்து விலகியே இவர் தமிழரசு கட்சியை உருவாக்கினார்.

உண்மையில் இக்கட்சியானது பெடரல் பார்ட்டி (federal party) அதாவது சமஸ்டி கட்சி என்றுதான் பதிவு செய்யப்பட்டது. ஆனாலும் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் அதனை 'தமிழரசு'க்கட்சி என செல்வநாயகம் அறிமுகம் செய்தார். அதன் அடிப்படையில் தொடக்க காலங்களில் இக்கட்சியானது சமஸ்டி கோரிக்கையையே முன்னெடுத்தது. எனினும் இக்கட்சியின் தலைமையில் தமிழர் விடுதலை கூட்டணி உருவானபோது அது தனி நாட்டு கோரிக்கையை முன்வைத்தது. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் "தமிழீழமே தீர்வு" என்றும் அதற்காக ஆயுதமேந்தி போராடுமாறும் பகிரங்க அழைப்பை தமிழ் மக்களை நோக்கி விடுத்தது இக்கட்சி.

இந்த வரலாறுகளின் தொடர்ச்சியில்தான் இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பை தலைமையேற்று நடத்திவருகின்ற தமிழரசு கட்சி தனது 16 வது தேசிய மாநாட்டை

நடத்தியிருக்கின்றது. இம்மாநாட்டில் 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானங்களை கூர்ந்து அவதானிக்கின்ற போது இப்போதுதான் யுத்தம் முடிந்ததா? என்கின்ற கேள்வி எழும்புவதை தவிர்க்க முடியவில்லை. ஏனெனில் 2014ஆம் ஆண்டு நடந்த தமிழரசு கட்சியின் 15வது மாநாட்டில் நிறைவேற்றிய 15 தீர்மானங்களுக்கும் இவற்றுக்கும் பெரிய வேறுபாடுகளை காணமுடியவில்லை. அதே வரிகளை தூசு தட்டியெடுத்து முன்னும் பின்னும் சற்று மாற்றியமைத்து விரிவு படுத்தி 27 தீர்மானங்களாக வரிசைப்படுத்தியுள்ளனர்.

இத்தீர்மானங்களில் அரசியல்தீர்வு, மீள்குடியேற்றம், கைதிகள் விடுதலை, காணி அபகரிப்புகள், இராணுவ பிரசன்னம், காணாமல் போனோர், என்பன சார்ந்த அரசியல் கோரிக்கைகளும் பெண்தலைமைகுடும்பங்கள்,கல்வி,வேலைவாய்ப்பு, மீன்பிடி,தொழிற்துறைகள்,நிதியொதுக்கீடுகள் என்றவாறான அபிவிருத்தி சார்ந்த கோரிக்கைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் நடைபெற்ற 15 ஆவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்மானத்தில் குறித்தசில வாரங்களுக்குள் அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் நில ஆக்கிரமிப்பு, கைதிகள் மற்றும் காணாமல்போனோர் விடயத்தில் மூன்று மாதங்களுக்குள் முடிவு காணப்படாமல் விட்டால் ஜனவரி மாதத்தில் இருந்து பரந்து பட்ட இடங்களிலும் சாத்வீகப்போராட்டம் வெடிக்கும் என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த எச்சரிக்கைகள் எல்லாம் இல்லாது இம்முறை தீர்மானங்கள் வெளிவந்திருக்கின்றன. 15 ஆவது தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்டிருந்த கடும்போக்கு நிலைப்பாடும் தற்போதைய 16 வது தேசியமாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள மென்போக்கு நிலைப்பாடும் ஐக்கிய தேசிய கட்சி அரசு மீது கொண்டுள்ள வர்க்கசார்பு உறவு நிலையை சுட்டிநிற்கின்றது.

ஆனாலும் உத்தியோக பூர்வ தீர்மானங்களில் அனுங்கல் கோரிக்கைகளை வெளியிட்டுக்கொண்டு சம்பந்தர் பேராளர்களை திருப்திப்படுத்த ஒலிவாங்கியில் வேறு மாதிரி விளாசித்தள்ளியுள்ளார். சிங்கள அரசுகளின் ஏமாற்று வேலைகளால்தான் புலிகள் ஆயுதமேந்த வேண்டி வந்தது. இந்நிலை தொடர்ந்தால் மீண்டும் போராட்டம் வெடிக்கும் என்றெல்லாம் பொரிந்து தள்ளியுள்ளார்.எப்படி பார்த்தாலும் வழமையாக மாவையார் பேசும் கதை வசனங்களை இம்முறை சம்பந்தர் பேசியுள்ளார் அவ்வளவுதான்.

அதுமட்டுமன்றி அரசியல் தீர்வு விடயத்தில் இன்றுவரை தமிழரசு கட்சிக்கு தீர்க்கமான கொள்கை எதுவும் கிடையாது என்பதை தீர்மான வரிகள் புடம்போட்டுக் காட்டியிருக்கின்றன.

அதாவது " அரசியல் தீர்வானது ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை, மனிதஉரிமை அடிப்படையில் சமஸ்டி

கட்டமைப்பில் பிராந்தியங்களினதும் தேசிய இனங்களினதும் தன்னாட்சி உரிமத்தை உறுதிப்படுத்தும் வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகின்றது."என குறிப்பிடப் பட்டுள்ளது. இங்கே 'ஒருமித்த இலங்கைக்குள்' என்கின்றபோது அது சமஸ்டிகளின் கூட்டை நிராகரிப்பதாகும். அதேவேளை சமஸ்டி என்கின்றபோது அது ஒருமித்த இலங்கை என்கின்ற ஒற்றையாட்சியை நிராகரிப்பதாகும். ஆனால் இங்கே இந்த தீர்மானம் ஆனது ஒருமித்த இலங்கை நாடு என்கின்ற ரணிலுடைய ஏக்க ராஜ்ய கொள்கையை ஏற்றுக்கொள்வதுடன் தமிழ் மக்களை ஏமாற்றும் முனைப்பில் சமஸ்டி கட்டமைப்பு.சுயநிர்ணய உரிமை என்கின்ற புலம்பல்களால் நிரம்பி வழிகின்றன. இவை அப்பழுக்கற்ற அரசியல் வரட்டுத்தன்மையின் வெளிப்பாடுகள் ஆகும்.

மேலும் அபிவிருத்திசார் தீர்மானங்கள் தமிழரசு கட்சியின் கொள்கைக்கு எதிரானவையாகும். ஏனெனில் கடந்தவாரம்கூட திருகோணமலையில் உரையாற்றிய சம்பந்தர் அபிவிருத்திக்காக உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம் என தெட்டத்தெளிவாக கூறியுள்ள நேரத்தில் அக்கட்சியின் மாநாட்டு தீர்மானங்கள் யாரை நோக்கி அபிவிருத்தியை கோருகின்றன? கடந்த வருடம் வேலையற்ற கிழக்கு பட்டதாரிகளை சந்தித்த சம்பந்தர் 'ஆயிரம் வேலைவாய்ப்புளை கேட்டாலும் என்னால் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவை அரசியல் தீர்வு நோக்கிய கருமங்களை பாதிக்கும் என்பதால் அவற்றை நான் கோரமாட்டேன்' என சொல்லியிருந்தமை தெரிந்ததே.

ஒரு புறம் வருகின்ற நிதிஒதுக்கீடுகளை திருப்பி அனுப்பிக்கொண்டும் மறுபுறம் அமைச்சு பதவிகளை பெறுபவர்களை துரோகிகள் என்று வசைபாடிக்கொண்டும் அரசியல் செய்கிற தமிழரசு கட்சியினர் நிதியொதுக்கீடுகளையும்.வேலைவாய்ப்புகளை பூட்டிய மாநாட்டு மண்டபத்துக்குள் கோருவது யாரை ஏமாற்றுவதற்கான பித்தலாட்டங்கள்? இந்த மாநாடுகளில் கலந்து கொள்கின்ற பேராளர்கள் எல்லாம் யார்? என்று கேட்க தோன்றுகிறது.

ஐக்கிய தேசிய கட்சி வீழ்கின்ற ஒவ்வொரு தருணங்களிலும் ஓடிச்சென்று அந்த ஆட்சியை காப்பாற்ற முட்டுக்கொடுக்கின்ற இவர்கள் இதுவரைஒரு முன்னாள் போராளியையேனும் விடுதலை செய்ய முடியாதவர்களாயிருக்கின்றார்கள். அபிவிருத்திக்காக வடக்கு மாகாண சபைக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்தில் மண்ணை வாரி இறைத்தவர்கள் இந்த தமிழரசு கட்சியினர். கேவலம் கல்முனை உபசெயலகத்தை தரமுயர்த்தும் ஒரு கீரைப்பாத்தி சாதனையைக்கூட செய்ய முடியாதவர்கள் மாநாடுகளில் தீர்மானங்களை நிறைவேற்றி என்ன செய்ய போகின்றார்கள்? இதனால்தான் மாநாட்டு மண்டபத்தை சுற்றி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட காணாமல்போனவர்களின் உறவினர்கள் துரோகிகளே என்று கூச்சலிட்டு உங்களை தூற்றியுள்ளனர்.

# உன்னைச்சொல்லி குற்றமில்லை பண்டாரநாயக்கா!

அரசகரும மொழிகள் வாரம் கடந்த 01/07/2019- 05/07/2019 வரையான ஐந்து நாட்களும் இலங்கையில் அனுஷ்ட்டிக்கப்பட்டது.

இவ்வாரத்தின் அங்குரார்ப்பண நிகழ்வானது கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.'மொழியுடன் வளர்வோம் மனங்களை வெல்வோம்'. 'இருமொழி கற்போம் நாட்டை காப்போம்' என்னும் தொனிப்பொருள்களின் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அரசகரும மொழிகள் வாரமானது தெரிந்தோ தெரியாமலோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமையானது வரலாற்று பொருத்தம் மிக்க ஒரு நிகழ்வாகும். ஏனெனில் இலங்கையை உள்நாட்டு யுத்தம் ஒன்றை நோக்கி தள்ளிய காரணிகளில் ஒன்றான மொழி பிரச்சனைக்கும் பண்டாரநாயக்காவுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு.

இலங்கையின் தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த மொழிசார் அரசியல் வரலாறு பண்டார நாயக்காவுடன் மட்டுமன்றி இலங்கையின் பல அரசியல் தலைவர்களோடு பின்னிப்பிணைந்ததாகும். 1956ஆம் ஆண்டு தனி சிங்கள சட்டத்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவே கொண்டு வந்தார் என்பதே பொத்தாம் பொதுவான வரலாறாக இதுவரை இருந்து வருகின்றது. இந்த நிலையில் 1956ஆம் ஆண்டு சிங்கள சட்டம் கொண்டு வரப் பட்டமைக்கு ஜி.ஜி.பொன்னம்பலம்.எஸ்.ஜே.வி செல்வநாயகம் போன்ற தமிழ் தலைமைகள் ஆங்கிலம் மீது கொண்டிருந்த மோகமே காரணமாகும் என்று கடந்த வாரம் பாராளுமன்ற விவாதமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த உரையின் பின்னணியை ஆராயும் பொழுது அது பொய்யானதொரு குற்றச்சாட்டு இல்லையென்றே புலப்படுகின்றது. சுதந்திரத்துக்கு முற்பட்ட 1920,30 களில் ஆங்கிலேயர் அதிகமான நிர்வாக உத்தியோகங்களை இலங்கையருக்கே வழங்க தொடங்கினர். ஆனாலும் ஆங்கில அறிவுபெற்ற மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களால் மட்டுமே அந்த வாய்ப்புக்களை பயன்படுத்த முடிந்தது.

தமிழ், சிங்களம் போன்ற சுதேச மொழிகளை மட்டுமே அறிந்திருந்த மீன்பிடி, விவசாய, கூலித்தொழிலாளர்கள் போன்ற சமூக பிரிவினரை இவ்வுத்தி யோகங்கள் சென்றடையும் வாய்ப்பு கிட்டவில்லை. ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்கக்கூடிய குடும்பப்பின்னணி கொண்டவர்களிடமே மீண்டும் மீண்டும் இவ்வுத்தியோகங்கள் சென்றடைந்து கொண்டிருந்தது.

இந்நிலைமையை மாற்றியமைக்கும் வண்ணம் சுதேச மொழிகளுக்கு அரச அந்தஸ்து கோருகின்ற குரல்கள் சமூகத்தின் கீழ்தட்டு மக்களிடம் இருந்து ஒலிக்கத் தொடங்கியது.

சுதேச மக்களின் தேவைகளில் இருந்து உருவான இக்கோரிக்கையானது சிங்களவர்களை போன்றே தமிழர்களுக்கும் அவசியமாய் இருந்தபோதும் அது தமிழ் மொழி பேசப்படுகின்ற வடகிழக்குப் பகுதிகளில் அதிக கவனம் பெறவில்லை. காரணம் வடகிழக்கின் அதிகார சக்திகளாக மக்களின் பெயரில் அரசியல் ஆதிக்கத்தை தக்கவைத்திருந்த வர்க்கத்தினர் இந்த சுயபாஷை கோரிக்கைகள் ஒரு இயக்கமாக வளர்ப்பதை விரும்பியிருக்கவில்லை.

ஆனபோதும் சிங்களப்பகுதிகளில் "சுயபாஷை இயக்கம்" என்னும் பெயரில் அது அமைப்பு வடிவம் பெற்றது. இந்த இயக்கத்தின் சார்பில் அரச சபையில் 1932 இல் ஜீ.கே.டபிள்யு.பெரேரா என்பவர் அரசசபை விவாதங்கள் சிங்களம், தமிழ் போன்ற மொழிகளில் இடம்பெறவேண்டும் எனும் பிரேரணையை முதன் முதலாக முன்வைத்தார். அதன்பின்னர் அரச அலுவலகங்களிலும் “சுயபாஷைகள்” உபயோகிக்கப்படவேண்டும் எனும் பிரேரணைகளும் இருவருடங்களின் பின்னர் அவராலேயே கொண்டு வரப்பட்டது.

அரச சபையில் மட்டக்களப்பு அங்கத்தவராய் இருந்த எஸ்.ஓ.கனகரெட்னம் அவர்கள் 1937 ஆம் ஆண்டில் “தமிழ் பாடசாலைகளில் சிங்களமும், சிங்களப் பாடசாலைகளில் தமிழும் கட்டாய பாடங்களாக கற்பிக்கப்பட வேண்டும்” என்கின்ற பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். இதனை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசும், ஆசிரியர் சங்கமும் ஆதரவளித்து வரவேற்றன. ஆனால் கிறிஸ்தவப் பாதிரியான பீற்றர்பிள்ளை கடுமையாக இத்திட்டத்தை எதிர்த்து விளக்கமளித்தார். இதன்காரணமாக நன்நோக்கம் கொண்ட இத்திட்டம் கைகூடாமல் போயிற்று.

1943ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் கூட இந்த சுயபாஷை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். அதன்காரணமாக “சிங்களம்” அரச

கருமமொழியாக இருக்க வேண்டும் எனும் பிரேரணையை அரசசபையில் அவர் கொண்டு வந்தார். 1946ஆம் ஆண்டு இந்த சிங்கள மொழி மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்ட மட்டக்களப்பு வி.நல்லையா சிங்களமும் தமிழும் அரச கருமை மொழியாக இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினார். அதனை மிகச் சாதணமான சுயவிமர்சனத்துடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஏற்றுக்கொண்டார் என்பதையும் அதன்பின்னர் சிங்களம் தமிழும் என பிரேரணை திருத்தப்பட்டது என்பதும் உண்மை.

வி.நல்லையாவுக்கு ஆதரவாக எஸ்.டபிள்யு.ஆர்.பண்டார நாயக்கா கூட அவ்வேளை உரையாற்றினார்.

இவற்றையெல்லாம் முழுமையாக எதிர்த்து யாழ்ப்பாணத்தின் பெருந்தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அரசசபையில் உரையாற்றினார் என்பதுதான் மிகக்கேவலமானது. "ஆங்கில மொழியையே இருசமூகங்களுக்கும் பொதுமொழியாக கொள்ளவேண்டும்" என தன் வர்க்க நலன் கருதிய கோரிக்கையை முன்வைத்து அவர் வாதிட்டார். ஜீ.கே.டபிள்யு.பெரேரா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்கா, மட்டக்களப்பு நல்லையா, டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா, த`ாநாயக்கா, டி.பி.ஜாயா, மட்டக்களப்பு எஸ்.ஓ.கனகரெட்னம் போன்ற மூவினத்தைச் சேர்ந்த தலைவர்களும் சுயபாசைகளை அரசகரும மொழியாக்குவதில் அக்கறை கொண்டு செயற்பட்டனர் இவர்கள் எல்லாம் ஒருமித்து தேசிய பாஷைகளை அங்கீகரிக்க ஆதரவு தருகையில் யாழ்ப்பாண உயர்வர்க்கத்தினுடைய பிரதிநிதியாய் "ஆங்கிலம் மட்டும்" என்கின்ற மொழிக்கொள்கையில் விடாபிடியாய் நின்றவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் அவரது தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களுமாகும்.

இத்தகைய ஆங்கில மோகம்கொண்டோரின் எதிர்ப்புகளை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு சுதந்திரம் அளிக்கப்படும் வரை ஆங்கிலேயர் அரச கரும மொழியாக ஆங்கிலத்தையே தொடர்ந்து பேணினர். ஆனால் சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் சிங்களப்பகுதிகளில் ஆங்கில எதிர்ப்பு அதிகரித்தது. ஆங்கிலத்தை அரச கரும மொழி அந்தஸ்த்தில் இருந்து அகற்றியாக வேண்டுமென்னும் கோரிக்கையே அரசியல் வாதிகளுக்கு முன் வைக்கப்படும் நிபந்தனையாக மாறியது. இறுதியில் தென்னிலங்கையில் சுடர்விட்ட சுயபாஷைகளுக்கான இயக்கம் தமிழை விடுத்து சிங்களத்தை மட்டுமாவது அமுல்படுத்தும் இயக்கமாக குறுகியது .பண்டார நாயக்கா 1956ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்றால் சிங்களத்தை அரசகட்டிலில் மீண்டும் ஏற்றுவேன் என உறுதியளித்து வாக்குகோரினார். அதேபோல அவர்வெற்றியடைந்து பிரதமரானவுடன் சிங்களத்தை மட்டும் அரசகரும மொழி யாக்கும் சட்டத்தை நிறைவேற்றினார். ஆனாலும் தமிழ் மொழி பேசும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழே பிராந்திய மொழியாக இருக்கும் என்பதையும் உப சரத்தாக அச்சட்டம் கொண்டிருந்தது.

ஆக உன்னைச்சொல்லி குற்றமில்லை பண்டாரநாயக்கா!

# அமிர்தலிங்கம் நினைவுதினம்

தமிழில் வல்லபம் மிக்க பேச்சாளரான அமிர்தலிங்கம் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரிடம் தமிழ் கற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராக விபுலானந்தர் கடமையாற்றிய போது பல்கலைக்கழக மாணவனாக இருந்த அமிர்தலிங்கத்துக்கு அந்த வாய்ப்பு கிட்டியது. அன்றிலிருந்து மட்டக்களப்பு தமிழகத்துக்கும் அவருக்குமான தொடர்புகள் ஆரம்பித்தன எனலாம். அதன்பின்னர் இளங்கலை பட்டதாரியாக வெளியேறிய அமிர்தலிங்கம் பல அரசியல் கட்டுரைகளை எழுததொடங்கினார். மண்டூரில் இருந்து 1948-1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த பாரதி என்னும் இலக்கிய சஞ்சிகையில்கூட அவரது அரசியல் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

1949 ல் சா.ஜே.வி.செல்வநாயகம் ஆரம்பித்த தமிழரசு கட்சியூடாக அவரது நேரடி அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது. அவரது நீண்ட அரசியல் பயணமானது பதவிகளால் மட்டும் அலங்கரிக்கப்பட்டதாயிருக்கவில்லை. சாத்வீக போராட்டங்கள், உண்ணாவிரதங்கள்.சத்தியாகிரகங்கள், ஊர்வலங்கள், கறுப்பு கொடியேந்தல்கள், கைதுகள், சிறைவாழ்வுகள்,அஞ்ஞாதவாசங்கள் , துன்பங்கள், துயரங்கள் என்பவற்றால் நிரம்பியது.

1952ஆம் ஆண்டு முதன் முதலாக போட்டியிட்ட பாராளுமன்ற தேர்தலிலே அவர் தோல்வி காண நேர்ந்தது. அதன்பின்னர் 1956ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த அவருக்கு தனது அரசியல் இருப்பை தொடர்ச்சியாக பேணுவதென்பது அத்தனை இலகுவானதாக இருக்கவில்லை. அதனை தொடர்ந்து வந்த 1960,1965 தேர்தல்களில் வெற்றிபெற்ற போதும் 1970ஆம்

ஆண்டு தேர்தலில் அவர் தோல்வியடைய நேர்ந்தது. அந்த தேர்தலிலே அவர் சார்ந்த கட்சியும் பலத்த சரிவை சந்திக்க நேர்ந்தது.

1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிங்கள மொழி சட்டத்தை எதிர்த்து தமிழரசு கட்சியினர் நடாத்திய சத்தியாகிரக போராட்டம் முக்கியமானது. காலிமுகத்திடலில் அந்த சத்தியாகிரகிகள் மீது சிங்கள காடையர்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் பலர் படுகாயமடைந்தனர் அந்த தாக்குதலில் இரத்தம் தோய்ந்த ஆடையுடன் பாராளுமன்றம் சென்றார் அமிர்தலிங்கம்.

1953ஆம் ஆண்டு இந்தியாவில் ஹிந்தி எதிர்ப்பு வலுப்பெற்றபோது டால்மியாபுரம் என்கின்ற பெயரை கல்லக்குடி என மாற்றக்கோரி நடைபெற்ற போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கே ரயிலை மறித்து தண்டவாளத்தில் தலையை வைத்து படுத்தார் கருணாநிதி. அந்த தீரச்செயல் எப்படி அவருக்கு "கல்லக்குடி காத்த வீரர்"என்கின்ற மங்காப்புகழை பெற்றுத்தந்ததோ அதேபோன்றே அமிர்தலிங்கம் காலிமுகத்திடலில் பட நேர்ந்த இரத்தகாயங்கள் அவருக்கு வலிமையான ஒரு அரசியல் அடையாளத்தை பெற்றுத்தந்தது.

1977 ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்ள நேர்ந்த போது செல்வநாயகம் மரணமடைந்தார். அவ்வேளையில் தனது சொந்த தொகுதியை விடுத்து செல்வநாயகத்தினுடைய காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டதனுடாக தனது தேர்தல் வெற்றியை காரியசித்தியாக்கினார்.. அத்தோடு கூடவே தானே கட்சியின் இரண்டாம் தலைமை என்பதையும் உறுதி செய்தார். இத்தகைய செயல் திறன்மிக்க திட்டமிட்ட நகர்வுகளே அவருக்கு என்றும் உறுதுணையானது.

1970ஆம் ஆண்டுகாலமானது தமிழரசு கட்சிக்கு மட்டுமன்றி தமிழ் தேசிய சக்திகளுக்கு பெரும் சவால் மிகுந்ததொன்றாகவிருந்தது. செல்வநாயகத்தின் அந்திம காலங்களில் தமிழ் காங்கிரஸ் என்றும் தமிழரசு கட்சி என்றும் இரு பெரும் துருவ அரசியல் வடக்கு- கிழக்கில் கால்கொண்டிருந்தது.மறுபுறம் இடதுசாரிகளின் செல்வாக்கு யாழ்குடாநாட்டில் அதிகரித்து வந்தது.அதனை எதிர்கொள்ள தமிழ் தேசிய சக்திகளை ஒருங்கிணைத்து செயல்படவேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்தார்.அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பிளவு பட்ட தமிழரின் அரசியல் பாதையை ஒருமித்து கூட்டியெடுத்து தமிழர் விடுதலை கூட்டணியாக மாற்றியமைத் தமையானது அமிர்தலிங்கத்தின் தலைமைத்துவ ஆளுமைக்கு கிடைத்த வெற்றியாகும். அதனுடாகவே வரலாறு காணாத வகையில் 17 உறுப்பினர்களை ஒருமித்து வென்று அவர் எதிர்க்கட்சி தலைவராகி வரலாற்று சாதனையையும் புரிய முடிந்தது.

அதேவேளை "வட்டுக்கோட்டை தீர்மானத்தின்" ஊடாக தமிழர்களின் அரசியல் பாரம்பரியத்தை தீவிரவாத சிந்தனை நோக்கி திருப்பியதில் இவருக்கு முக்கிய பங்குண்டு. இந்த விடயத்தில் தமிழ் தேசியவாதிகள் இவரை ஒரு

சாதனையாளராக பார்க்கின்றனர். அதேவேளை இளைஞர்களை ஆயுதமேந்தி வைத்து விட்டு அவர்களுக்கு ஓர் சரியான தலைமையை கொடுக்க முடியாது. இளைஞர்களை கட்டுமீறி செயல்பட அனுமதித்தார். அல்லது விட்டு விலகி ஓடி தமிழ் நாட்டில் அஞ்ஞாதவாசமிருந்தார். இதனூடாக வன்முறையும் அராஜகமும் கொண்ட ஒரு பாரம்பரியத்தை போராட்டம் என்கின்ற பெயரில் வடக்கு கிழக்கில் செயற்பட வாய்ப்பளித்தார்.என்கின்ற குற்றச்சாட்டுகளும் அவர் மீது இன்று பலராலும் முன் வைக்கப்படுகின்றன.

ஆனபோதும் இலங்கை தமிழர் பிரச்னையை இந்தியாவின் டில்லி முதற்கொண்டு சர்வதேச அரங்குகளை எடுத்துச்சென்றதில் அமிர்தலிங்கத்துக்கு நிகர் இன்றுவரை யாருமிலர் எனலாம். ஒரு தேர்ந்த இராஜதந்திரியாக அவர் இந்திராகாந்தி. ராஜீவ்காந்தி போன்ற இந்திய தலைவர்களை ஆட்கொண்டிருந்தார். செல்வநாயகம் காலத்திலிருந்தே தமிழ்நாட்டின் பெருந்தலைவர்களான பெரியார், காமராஜர். போன்றவர்களோடு அறிமுகமானார். பின்னாளில் முதல்வர்களாயிருந்த எம்ஜிஆர்.கருணாநிதி போன்றவர்களோடும் நெருக்கமான உறவுகளையும் பேணினார்.

ஆயுத போராட்ட இயக்கங்கள் ஐந்துடனும் இலங்கையரசு நேரிடையாக பேச வேண்டியதன் அவசியத்தை இந்தியாவுக்கு புரிய வைப்பதில் இந்திய இராஜதந்திரிகளை இலாவகமாக கையாண்டார். அதனூடாக 'திம்பு பேச்சுவார்த்தை' என்கின்ற உரையாடல் மேசையொன்றை நோக்கி முதன் முறையாக இலங்கையரசை நகர்த்துவதற்கு தேவையான நெருக்கடியை அவர்கொடுத்தார். பின்னர் அந்த அத்திவாரத்திலிருந்தே இலங்கை இந்திய ஒப்பந்தம் கூட சாத்தியமானது எனலாம்.

எத்தனைதூரம் தேசிய அளவிலும் சர்வதேச ரீதியாகவும் இலங்கை தமிழர்களின் மதிக்கப்படுகின்ற தலைவராக அமிர்தலிங்கம் இருந்த போதும் பரந்துபட்ட தமிழ் மக்களின் பெருந்தலைவராக அவரால் மிளிரமுடியவில்லை. தமிழ் மக்களில் ஒருபகுதியினர் அவர் மீது கொண்டிருந்த கசப்புணர்வுகளை அவரால் வெற்றி கொள்ள முடியவில்லை. குறிப்பாக 1965-1970களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்களில் அமிர்தலிங்கமும் சரி அவர் சார்ந்த தமிழரசு கட்சியும் சரி ஒரு வலதுசாரி மேட்டுக்குடி நிலைப்பாட்டையே எடுத்திருந்தனர். பாராளுமன்றில் "சங்கானை சாதியெதிர்ப்பு" போராட்டத்தை "அது ஒரு ஷங்காய் சங்கானையல்ல" என்று கேலிசெய்தார். வடகுடாநாட்டின் ஒடுக்கப்பட்ட மக்கள் இடதுசாரிகளையும் ஏன் சிங்கள தலைமைகளை கொண்ட தேசிய அளவிலான கட்சிகளையும் வரவேற்ற அளவுக்கு கூட அமிர்தலிங்கத்தை வரவேற்க முன்வராமைக்கு அவரது மேற்படியான அரசியல் தவறுகள் காரணமாயின.

அதேபோல செல்வநாயகத்துக்கு பின்னரான கட்சி தலைமையை கைப்பெற்றுகின்ற போட்டியில் கிழக்கின் முடிசூடா மன்னன் இராஜதுரையை

ஓரங்கட்டி, ஒதுக்கிவிடுவதில் அவர் கையாண்ட வழிமுறைகள் ஒரு சிறந்த தலைமைக்குரிய குணவியல்புகளை கொண்டிருக்கவில்லை. அந்த மனத்தாங்கல்கள் இன்றுவரை கிழக்கு மக்களிடையே வடுக்களாக தொடருகின்றன.

1989ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் அவர் மட்டக்களப்பில் போட்டியிட்டமையும் மட்டக்களப்பு மக்களால் பெரிதாக வரவேற்கப்படவில்லை. அதனை ஒரு யாழ்-மேலாதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாக மக்கள் பார்த்தனர். ஆனால் அதனை உணர்ந்துகொள்ள முடியாத நிலையில் அவர் படுதோல்வியடைய நேரிட்டது. எனினும் அவர் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டார்.

இறுதியாக எந்த தீவிரவாதத்தை அவர் ஆதரித்தாரோ,அதிலும் எந்த ஆயுதபோராட்ட தலைமையை அவர் அதிகம் முன்னிறுத்தினாரோ அதுவே அவருக்கு காலனாயிற்று.

1949ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிய அமிர்தலிங்கத்தினுடைய அரசியல் வாழ்வு 1989ஆம் ஆண்டு அவர் கொல்லப்படும் வரையான சுமார் நாற்பது வருட காலம் நீடித்தது.

மூத்த அரசியல் தலைவரான அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்டு இம்மாதத்துடன் முப்பது வருடங்கள் பூர்த்தியாகின்றது. அவர் கொல்லப்பட்ட போது அவருக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வெளியே வந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இப்படிச்சொன்னார் "ஒரு சிங்கள மகனின் கரங்களால் இவர் கொலை செய்யப்படவில்லை என்பதற்காக கடவுளுக்கு நன்றி சொல்கின்றேன்".

# இல்மனைட் அரசியல்

**ம**ட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் இல்மனைற் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அல் செமி கேவி மெட்டல்ஸ் என்கின்ற தனியார் கம்பனியே இதன் முதலீட்டாளர் ஆகும்.

மேற்படி கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கதிரவெளி, புச்சாகேணி, புதூர், நாகபுரம், பால்சேனை, வெருகல், கல்லரிப்பு பகுதிகளை குறிவைத்து மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமது தொழிற்சாலையை குறி வைத்து சுமார் 48 கிலோ மீட்டர் நீளமான கரையோர பகுதியை இந்த நிறுவனத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.

வாகரையில் உருவாகி வரும் இத்தொழிற்சாலையின் இல்மனைட் மண் அகழ்வு வேலைகள் மக்கள் வாழும் பிரதேசத்தில் அமையவிருப்பதானால் அதன் காரணமாக பாதிக்கப்படப்போகும் மக்களிடம் அது பற்றிய தகவல்களைப் பெறும் நோக்கில் வினவிய போது தோட்ட செய்கை மற்றும் ஆரம்ப பாடசாலை அமைப் பதற்கான வேலைத்திட்டங்கள் என பொய்யான தகவல்களை வழங்கியே இக்காணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிந்தது.

அத்தோடு கூடவே இந்த காணிகள் ஒப்பக்காணிகள் என்பதால் அக்காணிகளை விற்பனை செய்யமுன்வராவிடின் அவற்றை சுவீகரித்து அரசகாணி ஆகிவிடுவோம் என அச்சுறுத்தியும் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர். இதன்காரணமாக இக்காணிகள் அபகரிப்பின் இடைத்தரகர்களாக அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளமையையும் தெரிய வருகின்றது.

எனவே இந்தமுதலாளிகளின் மக்கள் விரோத செயற்பாடுகளில் பெருமளவான லஞ்ச தொகையும் கைமாறியிருக்கலாம் என சந்தேகங்கள் வலுக்கின்றன.

இத்திட்டம் அமுலாக்கப்படுமிடத்து கடலோர மீன்பிடியை மட்டுமே நம்பி வாழும் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் நேரடியாக பாதிப்புறும் அபாயம் உள்ளது. உடனடியாகவே ஐந்து கரைவலைப்பாடுகளும் 150 குடும்பங்களும் தொழிலை இழக்க நேரிடும். வானுயர வளர்ந்துள்ள தென்னை மரங்கள் அழியும் ஆபத்துகள் உள்ளன. கனிய மணல் அகழ்வின்போது கடலோர தாவரங்கள் அகற்றப்படுவதனால் வெப்பம் நேரடியாக பூமியைத்தாக்குவதுடன் வெளிவரும் குளிர் காற்று வெப்பமாக மாறி உள்ளுர் மழையின் அளவிலும் தன்மையிலும் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும்.மண் அகழ்வு நேரிடையாக இடம்பெறுவதானால் நிலத்தடியில் கடல் நீர் உட்புகுந்து அண்மைய கிராமங்களின் நிலத்தடிநீர் உப்பாக மாறும் அபாயம் உள்ளது.இதனால் பல்லாயிரம் குடும்பங்கள் குடிநீர் பற்றாக்குறையை எதிர் கொள்ள நேரிடும். .

தாது மணல் பிரித்தெடுக்கும் காரணத்தினால் இரும்பு குளோரைடு மற்றும் அமிலக்கழிவுகள் சுற்றியுள்ள நிலத்தையும் நிலத்தடி நீரையும் மிக மோசமாக மாசுபடுத்தும். ஆலையில் பிரித்தெடுக்கப்படும் ஜிர்க்கான் கனிமம் ஆலையை சுற்றி இருபது கிலோ மீற்றர் தூரம் வரை கதிர்வீச்சுக்களை பரவைச்செய்யும். இதனால் சுற்று சூழலில் வாழும் மக்களும் வீட்டு பிராணிகளும்.விவசாய கால்நடைகளும் மரபணு நோய்களுக்கும் பல்வேறு வகை புற்றுநோய்களுக்கும் நுரையீரல் பாதிப்பு, சுவாச குழாய் பிரச்சனைகள் போன்றவற்றுக்கும் ஆளாக வேண்டி வரும். சல்பர் டை ஆக்சைடு உள்ளுர் அளவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். அது அந்தப் பகுதியில் அமில மழையை ஏற்படுத்தும். ஆலையில் இருந்து வெளியேறும் திடக்கழிவுகள் நிலத்தையும் நேர் நிலைகளையும் கடலையும் நஞ்சாக்கும்

இல்மனைட் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி முறையில் வெளியேறும் மற்ற முக்கியப் பொருள்கள் ைட்ரஜன் குளோரைடு, ைட்ரோ குளோரிக் அமிலம், குளோரின் வாயு, அமிலத் தன்மையுள்ள சகதி, சல்பர் டை ஆக்சைடு, கார்பன் டை ஆக்சைடு, கன உலோகங்கள் நிறைந்த திடக்கழிவுகள், அமிலத் தன்மையுள்ள திரவக் கழிவுகள் மற்றும் காற்றில் மிதக்கும் திடப்பொருள் துகள்கள். டைட்டானியம் டை ஆக்சைடு உற்பத்தியில் வெளியாகும் கழிவுகளில் அலுமினியம், ஆண்டிமணி, ஈயம், மோலிப்டனும் போன்றவை மிகக்குறைந்த அளவில் இருக்கும்.

இவை நுரையீரலில் மிகக்குறைந்த அளவு நுழைந்தால்கூட, நீண்ட காலப்போக்கில், சரிசெய்ய முடியாத இழப்புகளை ஏற்படுத்தக்கூடியவையாகும்.சல்பர் டை ஆக்சைடு உள்ளுர் அளவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்திய கேரளாவில் சவரா என்னும் ஊரில் கேரளா மினரல் ரூ மெட்டல் என்னும் நிறுவனம் டைட்டானியம் ஆலையை நடத்தி வருகிறது. அந்த

ஆலையிலிருந்து வெளியேறிய கழிவுகள் நிலத்தடி நீரை மாசுபடுத்திவிட்டன என்று உச்ச நீதி மன்றக் கண்காணிப்புக் குழு 2004இல் குற்றஞ்சாட்டியது. தற்போது கேரளாவில் அந்த ஆலையைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள மக்கள் ஆலை கொண்டுவந்து வினியோகிக்கும் நீரை நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

குளோரைடு முறையின் மூலம் டைஆக்சினும் (dioxins) /GuhDk; (furans) உற்பத்தியாகும் என்பதே. குளோரைடு முறை இந்த விஷ வாயுக்களையும் உற்பத்தி செய்யும் என்று ஐக்கிய நாட்டுச் சபையின் சுற்றுச்சூழல் திட்டம் கூறுகிறது. அறிவியலின் மிகக்கொடூரமான நச்சுத் தன்மைகொண்ட 100 வேதிப்பொருள்களின் பட்டியலில் இந்த இரண்டு பொருள்களும் முக்கியமானவையாகும். எனவே இந்த இல்மனைட் தொழிற்சாலை நிறுவும் திட்டம் முற்றாக தடை செய்யப்படவேண்டும். இயற்கையை நம்பி வாழும் எமது மக்களின் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அபிவிருத்தி என்னும் பெயரில் சுற்று சூழலும் சமூக பாதுகாப்பும் அலட்சியம் செய்யப்படுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த இல்மனைட் ஆலையின் பெயரில் இவ்வாண்டு ஆரம்பம் முதல் பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு பேரணிகளும் நடந்து வருகின்றன. ஆனபோதிலும் இவ்வார்ப்பாட்டங்களில் பெருந்தொகையான மக்கள் பங்கெடுக்காமை வருந்தத்தக்கதாகும். குறித்த சில அரசியல் வாதிகளின் திட்டமிடலின் பெயரிலேயே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஏனைய பிரதேச மக்கள் இதன்பொருட்டு கூடிய கவனம் கொள்ளவில்லை. சூழலியலாளர்கள், புத்திஜீவிகள்,மனித உரிமையாளர்கள் எழுத்தாளர்கள், என்கின்ற எந்த பிரிவினரின் பிரசன்னங்களையும் இந்த ஆர்ப்பாட்டங்களில் காண முடியவில்லை.

எனவே சில அரசியல் எதிர்ப்பு அரசியல் ஊடாக தமது விலாசங்களை பெரிது படுத்திக்கொள்வதை தவிர இவர்களின் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் வேறு எதுவும் நடக்கப்போவதில்லை. ஒரு சில படங்களையும் செய்திகளையும் பிரசுரிப்பதோடு சம்மந்தப்பட்ட அரசியல் வாதிகளின் கடமை முடிந்து விடுகின்றது. எனவே மக்கள் திரள் (masse mouvement) பங்கெடுக்காத எப்போராட்டங்களும் வெற்றிபெறுவது சாத்தியமில்லை. அதிலும் சிலர் இதனை தெரிந்து கொண்டே திட்டமிட்டு கிழக்கை குறிவைத்து தமது அரசியல் கட்சிகளை அறிமுகம் செய்ய இதுபோன்ற விடயங்களை கையிலெடுப்பது நடக்கின்றது. கறுப்புச்சட்டையுடன் இதற்காகவே வடக்கிலிருந்து இளைஞர்கள் குழாம் சிலரால் அழைத்து வரப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் உண்டு.

உண்மையில் வாகரைப்பிரதேச சபையை ஆட்சி செய்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்த பிரச்னையை நேரடியாக அரசாங்கத்துடன் பேசுவதன் ஊடாக கையாள தவறியுள்ளனர். அதே போன்று மட்டக்களப்பில் முக்கியமான அரசியல் சக்தியான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் இத்தகைய பிரச்சனைகளுக்கு

பெருமளவான மக்களை திரட்டி அரசுக்கு போதிய அழுத்தம் கொடுக்கும் தமது வரலாற்று கடமையினை செய்ய தவறி வருகின்றனர்.ஏனெனில் மண் மீட்பு போராட்டத்தின் தொடர்ச்சியில் அரசியலுக்கு வந்தவர்கள் அவர்கள்.

கடந்த காலங்களில் வாகரை பிரதேசமென்பது ஆயுத போராட்டத்தின் முக்கிய புள்ளிகளில் ஒன்றாக இருந்தது இந்த மண்ணை காப்பதற்காகவே பல நூறு போராளிகள் தம்முயிரை இழந்துள்ளனர். புலிகள் இராணுவத்தோடு மோதும் போதும் சரி தங்களுக்கு இரண்டு பட்டு நின்று வாகரையை மீட்க இருதரப்பாக மோதிக்கொண்ட போதும் சரி எமதுபிள்ளைகளின் இரத்தம் பெருமளவில் சிந்தப்பட்ட பூமி இதுவாகும். அந்த வீரர்கள் காப்பதற்காக போராடிய மண் இப்போது எங்கிருந்தோ வந்த பண முதலைகளால் அள்ளிச்செல்லப்பட போகின்றது.

இந்த இடைவெளியை பயன்படுத்திக்கொண்டே பல அரசியல் வாதிகள் இதில் மூக்கை நுழைக்க தொடங்கியுள்ளனர். அதிலும் முன்னாள் வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரன் இந்த பிரச்சனைக்குறித்து களமிறங்கியுள்ளார். அவரை பொறுத்த வரையில் 2015ஆம் ஆண்டு அவர் அதிகாரத்தில் இருந்த வேளையில் சுன்னாகம் நோர்த்தன் பவர் பிரைவேட் லிமிட்டட் என்னும் கம்பெனியின் மின்னுற்பத்தி கழிவுகள் மக்களின் குடிநீரில் நச்சு கலப்பை உருவாக்கி வருகின்றன என்கின்ற பிரச்சனை எழுந்த போது அவர் நடந்து கொண்ட விதம் அவரது மக்கள் நலனை பிரதி பலிக்கவில்லை. மாறாக அவரது தலைமையில் உருவாக்கப்பட்ட நிபுணர் குழுவானது "சுன்னாகம் நீர் குடிநீர் அசுத்தமாகவில்லை, அதில் நச்சு கலப்பு இல்லை" என்று பொய் சாட்சி சொல்லி அறிக்கை சமர்ப்பித்தது. அது மிக மோசமான அறிக்கையாகவும் குற்றமிழைத்த மின்னுற்பத்தி நிறுவனத்துக்கு ஒத்தூதும் அதிகார வர்க்க நலன் சார்ந்த அறிக்கையாகவும் இருந்தது.

இறுதியில் சுற்று சூழல் மற்றும் இயற்கை ஆய்வு நிலையத்தின் சார்பில் பேராசிரியர் ரவீந்திர காரியவசத்தினால் உயர் நீதி மன்றுக்கு இப்பிரச்சனை எடுத்து செல்லப்பட்ட போது விக்கினேஸ்வரனின் நிபுணர் குழு அறிக்கை பொய்யானது என உறுதி செய்யப்பட்டதோடு 2 கோடி ரூபாய்கள் அபராதம் அந்த நிறுவனத்துக்கு விதிக்கப்பட்டது.

சுன்னாகம் மக்கள் நஞ்சுண்ட நீரை குடித்தாலும் பரவாயில்லை என்று நடந்து கொண்டவர்கள் தற்போதுவந்து வாகரை இல்மனைட் தொழிற்சாலையால் எமது மக்களுக்கு வரும் பாதகங்களை பற்றி கவலையுறுவதாக சொல்லுவது பொய் வேசமன்றி வேறென்ன? இதை நம்பி ஒரு கூட்டம் மட்டக்களப்பில் கூட்டமைப்புக்கு மாறாக விக்கினேஸ்வரனை கண்டு பிடித்து விட்டோம் என்று மகிழ்வுறுவது கேவலமானது. மீண்டும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் புதிய எஜமானர்களை நம்பி ஏமாறுவது எண்ணைக்குள் இருந்து நெருப்புக்குள் பாய்வதற்கு சமானதாகும். அதற்கு இந்த இல்மனைற் அரசியல் வாய்ப்பளிக்க கூடாது.

# ஹிஸ்புல்லா...... உன்னால் ஒரு சேதி

இலங்கை முஸ்லிம்களின் அடையாளம் காத்தான்குடி என்றால் காத்தான்குடியின் அடையாளம் ஹிஸ்புல்லா ஆகும். அந்தளவிற்கு அவர் காத்தான்குடியின் அரசியல், சமூக, கலாசாரா விடயங்களில் இரண்டறக் கலந்தவர். அஷ்ரப் தலைமையிலான முஸ்லீம் காங்கிரஸ் தேர்தல் அரசியலில் காலடியெடுத்து வைத்தபோது இந்த ஹிஸ்புல்லாவும் தனது அரசியல் கன்னிப்பயணத்தினை தொடங்கினார்.

1989ஆம் ஆண்டு இடம்பெற்ற வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் அமர்ந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரிசையில் அவரும் ஒருவர். அன்றிலிருந்து இன்றுவரை சுமார் முப்பது வருடகாலமாக அரச பதவிகளில் தொடர்ச்சியாக இருந்து வருகின்றார்.

காத்தான்குடி மக்களை பொறுத்தவரையில் அவரைப்போல் ஒரு தலைமை இனி எக்காலத்திலும் கிடைக்காது என்று எண்ணுகின்றார்கள். அதனாற்தான் அவர் எந்த சின்னத்தில் நின்றாலும் அதை நோக்கி 'அதுவே காத்தான்குடி மக்களின் சின்னம்' என்பதாக மக்கள் அவரின் பின்னால் அணி திரளுகின்றனர்.காத்தான்குடி பட்டினத்தை பாரிய அபிவிருத்தியடைய செய்தமையில் அவருக்கு நிகர் அவரேதான். ஒரு தனி ஊரை மட்டும் அடிப்படையாக கொண்டு இயங்கும் ஒருவர் தேசிய அளவில் எந்தவொரு அரசியல்வாதியும் செய்திருக்கமுடியாத அளவுக்கு தனது சமூகம் சார்ந்து பணி செய்வதில் வெற்றி கண்டிருக்கின்றார்.

அந்த வகையில்தான் இன்று கட்டப்பட்டிருக்கும் புனாணை தனியார் பல்கலைக்கழகம் அவரது மிகப்பெரிய சாதனையாகும்.இலங்கையிலே இல்லாத

அளவுக்கு பிரமாண்டமாயும் அரேபிய கட்டிடக்கலை சார்ந்தும் அந்த வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன என்பதோடு பலநூறு பேரீட்சை மரங்கள் அதனை சுற்றி நடப்பட்டுள்ளன. கண்களை கட்டிவிட்டு ஒருவரை கொண்டுபோய் அங்கே நிறுத்தி கண்களை அவிழ்த்துவிட்டால் எவருமே அது கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியென்றோ அல்லது இலங்கையின் ஒரு பகுதியென்றோ சொல்லப்போவதில்லை. மாறாக ஏதோ ஒரு அரேபிய நாடு என்றுதான் உணரமுடியும். தனக்கும் தனக்குரியவர்களுக்கும் வருமானம் தேடுகின்ற ஒரு தனியார் பல்கலை கழகத்தை முஸ்லீம் அடையாளங்களுடன் அழகு படுத்தி அதனை முஸ்லீம்களுக்காக தான் செய்துமுடித்த மிகப்பெரிய சேவையாக உணரவைப்பதில் முதற்கட்டமாக வெற்றி பெற்றுள்ளார் ஹிஸ்புல்லா.

கடந்த ஈஸ்ட்டர் தாக்குதல்களையடுத்து சில முஸ்லீம் அமைச்சர்களும் அந்த பயங்கரவாதிகளுக்கு உடந்தையாக இருந்தனர் என்கின்ற சந்தேகங்கள் வலுத்தது. அந்த சந்தேகங்கள் ஹிஸ்புல்லாவையும் நோக்கி எழுந்தன. அதன் காரணமாக புணானை பல்கலைக்கழகத்தை நோக்கியும் பலவிதமான சந்தேகங்கள் எழுந்தன. எத்தனை சந்தேகங்கள்?எத்தனை குற்றச்சாட்டுக்கள்?எத்தனை பயமுறுத்தல்கள்? எத்தனை நெருக்கடிகள்? எத்தனை விசாரணைகள்? ஆனால் வெறும் நான்கு மாதங்களுக்குள்ளே அனைத்தையும் வென்று இந்த பல்கலைக் கழகத்தை யாரும் ஒன்று செய்துவிட முடியாது,எதிர்வரும் ஜனவரியில் வளாகம் திறக்கப்படும் என்று அறிக்கை விடுகின்றார் என்றால் அதுதான் ஹிஸ்புல்லா.

குறித்த பல்கலைக்கழகம் மீதோ அல்லது ஹிஸ்புல்லா போன்ற முஸ்லீம் தலைமைகள் மீதோ வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதம் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களை வலுவாக்குவதோ அல்லது நீர்த்துப்போகச்செய்வதோ அதைப்பற்றிய மீளாய்வை செய்வதோ இப்பத்தியின் நோக்கமல்ல. ஹிஸ்புல்லா போன்ற ஆளுமைகள் ஒரு பௌத்த சிங்கள மேலாதிக்க அரசினை கையாளுவதில் எப்படியெல்லாம் முன்னேறுகின்றார்கள் என்பதை உற்றுநோக்குவதே இப்பந்தியின் நோக்கமாகும்.

ஆனால் இவ்வளவு பெரிய நிதிகளை அவர் முஸ்லீம் மக்களின் பெயரில் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்துதான் திரட்டியுள்ளார். அவை அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களாக இருக்கலாம். எவ்வாறாக இருந்த போதிலும் இலங்கை முஸ்லிம்களின் பெயரில் கோடிக்கணக்கான பணத்தை வெளிநாடுகளுக்கு கதை சொல்லி அவர் கறந்திருப்பதுதான் மிகப்பெரிய சாதனையாகும்.

குறித்த அந்த இடத்தை தெரிவு செய்வதிலும் அதற்கான அரச அனுமதியை பெறுவதிலும் அவர் வகுத்து முன்னேறிய பாதைகள் அவ்வளவு இலகுவானதாய் இருந்திருக்க முடியாது.

அண்மையில் வியாழேந்திரன் போன்ற பாராளுமனர் உறுப்பினர்கள் இந்த வளாகம் திறக்கப்பட கூடாதென்று பண்ணிய ஆர்ப்பாட்டங்களை பற்றி ஒரு

ஒரு ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். 'அவர்கள் தமிழ் மக்களிடம் பிரபல்யத்தை தேடுவதற்காக அப்படி செய்கின்றார்கள்'. 'ஒரு நேசறி ஸ்கூலை கூட கட்ட முடியாதவர்கள் பல்கலை கழகத்தை பற்றி கதைப்பது வேடிக்கை யானது' என்கின்றார் அவர். இது வியாழேந்திரனுக்கு மட்டுமல்ல ஏறக்குறைய நமது தமிழ் தலைமைகள் அனைவருக்கும் கச்சிதமாக பொருந்துகின்ற விமர்சனமாகும். இந்த விமர்சனத்திலிருந்து நாம் தொடங்க வேண்டிய பல கருமங்கள் உண்டு.

இந்தியா எமது நேச நாடு.அதிலும் தமிழகம் தொப்புள் கோடி உறவுகொண்டது. அங்கிருந்தெல்லாம் எவ்வளவோ உதவிகளை நமது தலைவர்களால் பெற முடியும்.புலம்பெயர் தமிழர்களிடம் எத்தனை முதலீடுகளை பெற்று எமது மண்ணை வளமாக்கினோம்? வெளிநாட்டு தமிழர்கள் கொப்பி. பென் வாங்குவதற்கு கொடுக்கும் காசே பெரிதென்று நமது எம்பிக்கள் தவங்கிடக்கின்றனர். அதை சாதனையாக பிரசுரிக்க சில இணையத்தளங்கள் வேறு.

ஹிஸ்புல்லா போன்றோர் தமக்கு கிடைக்கின்ற அதிகாரங்களை ஒரு போதும் வீணடிப்பதில்லை.மக்கள் வழங்குகின்ற ஆணைகளை சரியான பேரம்பேசலுக்கு பயன்படுத்துவதில் வல்லவர்களாக இருக்கின்றனர். காத்தான்குடியை பார்த்து நமது மக்கள் இன்று பிரமிக்கின்றார்கள்,சிலர் எரிச்சலைடைகின்றனர்.வேறு சிலர் கோபப்படுகின்றனர் சிலருக்கு இந்த பேரீட்சை மரங்களும் இஸ்லாமிய அடையாளங்களும் அசூசையாக இருக்கின்றது. அதேவேளை இப்படியொரு தலைவன் கிடைத்ததில் பெருமைகொள்பவர்களாகவே ஏறக்குறைய எல்லா முஸ்லிம்களும் உள்ளார்கள். அவரது அரசியல் எதிரிகள் கூட அவரது சாதனைகளை குறைத்து பேசுவது கிடையாது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே இல்லாத அளவுக்கு மிகப்பெரிய இஸ்லாமிய நூதனசாலை ஒன்றை காத்தான்குடியில் அவர் கட்டியிருப்பது ஊரை விடுத்து சமூகம் சார்ந்த அவரது பார்வையை பறை சாற்றுகின்றது. இராவணன் ஆண்டான்.எல்லாளன் ஆண்டான். குளக்கோட்டன்ஆண்டான். உலக நாச்சியார் ஆண்டாள் என்று அன்றிலிருந்து இன்றுவரை மார்புத்தட்டும் தமிழர்களின் வரலாறை கூறுவதற்கு இன்றுவரை கிழக்கில் ஒரு உருப்படியான நூதனசாலையில்லை என்பது வெட்கக்கேடானது. கதிர்காமத்தில் மட்டுமல்ல கதிரவெளியிலும் வெல்லாவெளியிலும் கற்கால மனிதர்கள் வாழ்ந்த சான்றுகள் உண்டு. ஆனால் உலக புகழ் மிக்க இந்த வரலாறுகளை பேச நமது துறைசார் அறிஞர்களோ. அரசியல்வாதிகளோ எத்தனை ஆதாரங்களை ஒருங்கிணைத்து பாதுகாப்பது வைத்திருக்கின்றனர். எல்லோரும் சிங்களமயமாக்குகின்றான் சிங்கள மயமாக்குகின்றான் என்று சுட்டுவிரல் நீட்டுவதைத் தவிர தமிழையும் தமிழ் மண்ணையும் வளப்படுத்த துடியாய் துடிப்பவர்கள் யார்?

காத்தான்குடி வீதி இருவழிப்பாதையாக செப்பனிடப்பட்ட அதே காலத்தில் தான் திருமலை வீதியும் செப்பனிடப்பட்டது. ஆனால் அதனை நாம் அழகு படுத்து

வதிலும் பராமரிக்கின்ற விதத்திலும் ஏன் பின்னிக்கின்றோம். எழுவான் கரையையும் படுவான்கரையையும் இணைக்கின்ற மண்முனை பாலம் உல்லாச பயணிகளை கவர்ந்திழுக்க கூடிய ஓரிடமாகும். அதையிட்டு மேலதிக அழகுபடுத்தல்களை செய்வதற்கு எந்த அரசியல்வாதி ஒரு கணம் சிந்தனை செய்தான்? இந்த விடயத்தில் ஆரையம்பதி வீதி மட்டும் சற்று விதிவிலக்காக இருப்பது சிறியதொரு ஆறுதல். அங்கே எமது வரலாற்றை பறைசாற்றுகின்ற அழகு மிகு சிலைகள் எழுந்து நிற்பது மனதுக்கு ரம்மியமான உணர்வுகளை தருகின்றது.

சிங்கள குடியேற்றம் சிங்கள குடியேற்றம் என்று அறுபதாண்டு காலத்தை கடந்து விட்டோம் இப்போது முஸ்லீம் குடியேற்றம் முஸ்லீம் குடியேற்றம் என்று தொடங்கியுள்ளோம். இவற்றை பேசுவது கூடாதென்பதல்ல. இவற்றை பேசுவதும் அதைவைத்து வாக்கு வேட்டையாடுவதும் தொடர்கின்றதேயன்றி நமது மண்ணை காக்க என்ன திட்டங்களை வகுத்தோம்? எத்தனை புதிய கிராமங்களை உருவாக் கினோம்? இன்று 'பொலன்நறுவையையும் ஒட்டமாவடியையும் இணைக்கின்ற பாதை பத்தோ இருபது வருடங்களுக்கு முன்னர் வெறும் கரிசல்காடாய் கிடந்தது. இன்று எத்தனையோ முஸ்லீம் கிராமங்களும் பள்ளிவாசல்களும் வந்து விட்டன என்று அண்மையில் ஒரு ஓய்வு பெற்ற அதிபர் என்னிடம் சொல்லி வெதும்பிக் கொண்டார்.

பறிபோகின்ற எல்லைக்கிராமங்களை பாதுகாக்க எத்தகைய வேலைத் திட்டங்களை முன்னெடுத்தோம்? யுத்தகாலங்களில் வெளியேறிய எல்லைக்கிராம மக்களை மீள குடியேற்ற இன்று எந்த தடையும் இல்லையே? அங்கு மீண்டும் திரும்பிச்சென்று வாழ முனையும் மக்களுக்கு அவர்களது வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்த நமது தலைவர்கள் செய்த அபிவிருத்திகள் என்ன? ஆனால் முஸ்லீம் தலைமைகள் தமது மக்களுக்கு இத்தகைய விடயங்களில் சிறந்த வழிகாட்டுகின்றனர்.

அரசாங்கம் செய்வதில்லை, செய்வதில்லை என்று குறைப்பட்டு கொள்வதில் எந்த பிரயோசனமும் இல்லை. பாராளுமன்றத்தில் பிரேரணையை கொண்டு செல்லவேண்டும். அவற்றை முன்வைப்பதிலும் வாதபிரதிவாதங்களை நகர்த்தி செல்வதிலும் ஆதாரங்கள் புள்ளிவிபரங்கள் போன்றவற்றை எடுத்துச்சொல்வதிலும் திறமையை நிரூபிக்க வேண்டும். அதுமட்டும்மல்ல அமைச்சரவையில் நமது பிரசன்னம் முக்கியமானது. அங்கே நிறைவேற்றப்படும் முடிவுகள்தான் அனைத்துக்கும் ஆதாரம்.அதை விடுத்து எதிர்ப்பு அரசியல்.மட்டுமன்றி சரணாகதி அரசியலும் கவைக்குதவாததே. ஐம்பது வருடகாலம் எதிர்ப்பு அரசியல் செய்த தமிழர்களின் பிரதான தலைவர்கள் தற்போது சரணாகதி அரசியலுள் வீழ்ந்து கிடக்கின்றனர். ஆனால் முஸ்லீம் தலைவர்களோ மக்கள் சக்தியை வைத்து பேரம்பேசுகின்ற இணைக்க அரசியலையே எக்காலத்திலும் முன்னெடுக்கின்றார்கள்.அதிகாரத்தில் பங்கெடுக்கின்றனர். அதனால்தான் நமது மக்கள் முஸ்லீம் தலைவர்களை பார்த்து கொட்டாவி விடுகின்றனர்.

அன்று அஷ்ரப்பால் ஒரு தென் கிழக்கு பல்கலைக்கழகம்.இன்று ஹிஸ்புல்லாவால் புனாணை பல்கலைக்கழகம். அதேபோன்றுதான் தேவநாயகம் அதிகாரத்தில் பங்கெடுக்கும் அரசியலை செய்தமையால் ஒரு கிழக்கு பல்கலைக்கழகம். இராஜதுரை அமைச்சரானமையால்தான் எமக்கு ஒரு இசை நடனக்கல்லூரி. பிள்ளையான் முதலமைச்சரானதால்த்தான் மட்டக்களப்புக்கு ஒரு உருப்படியான பஸ் நிலையமும் வவுணதீவுக்கு ஒரு கல்வி வலையம் கிடைத்தது. ஆனால் அறுபது வருடகாலமாக தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை பெற்றுக்கொண்டு தலைவர்கள் என்று மார்பு தட்டுபவர்களால் தமது சாதனையாக ஒரு செங்கல்லைத்தானும் காட்டமுடியாது போயுள்ளது. தமது பதவி சுகங்களை தவிர வேறு எதற்குமே மக்கள் வழங்கும் ஆணைகளை பயன்படுத்தாது தமிழரசு கட்சியினர் வீணடித்து வருகின்றனர்.

அதற்கல்ல மக்கள் வாக்களிப்பது என்பதை ஹிஸ்புல்லாஹ்விடமிருந்து இவர்கள்கற்றுக்கொள்ளவேண்டும்.ஹிஸ்புல்லாவால் முடியுமென்றால் நம்மால் ஏன் முடியாது?

# "கிழக்கை மீட்போம்" யார், யாரிடமிருந்து மீட்பது?

அண்மைக்காலமாக கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் கிழக்கு என்கின்ற சொல்லாடல் அதிகமாகவே பயன்படுத்தப் பட்டுவருகின்றது. இதுவரை காலமும் 'கிழக்கு என்று பேச்சை எடுத்தாலே அது பிரதேசவாதமாகும்' என்கின்ற ரீதியில் அது பார்க்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றோ கிழக்கு மாகாணத்தின் பிரச்சனைகள் வேறானவை. கிழக்கில் இருப்பவர்களே கிழக்கு மாகாண அரசியலை பற்றிய முடிவுகளை எடுக்க முடியும். கிழக்குக்கு வெளியே இருக்கும் தலைவர்க ளெடுக்கும் முடிவுகள் கிழக்கின் பல்லின சூழலுக்கு பொருத்தமானவையல்ல. கிழக்கின் அரசியல்வாதிகள் ஒருமித்து கைகோர்க்க வேண்டும் என்றவாறாகவெல்லாம் எழுத்துக்களும் பேச்சுக்களும் உரையாடல்களும் விவாதங்களும் நிறையவே நடந்தேறுகின்றன. இதன் அடிப்படையில்தான் 'கிழக்கை மீட்போம்'என்கின்ற கோஷம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்போன்ற கிழக்கை அடிப்படையாக கொண்ட கட்சியினரால் அண்மைக்காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதுகுறித்து பலருடனும் ஒரு வினவலுக்காக உரையாடியபோது மீண்டும் ஒரு தமிழன் கிழக்கின் முதல்வராக வேண்டும் என்பதையிட்டு சிலர் கருத்து தெரிவித்தனர்.வேறு சிலரோ முஸ்லிம்களிடமிருந்து கிழக்கை மீட்பதற்கு ஒரு தலைவன் தேவை என்கின்றனர். இன்னும் சிலரோ யாழ்ப்பாண தலைமைகள் எம்மை தீர்மானிக்கும் பொருத்தப்பாடற்ற வரலாற்று தொடர்ச்சியிலிருந்து கிழக்கை மீட்க வேண்டும் என்கின்றனர். இவ்வாறாக கிழக்கை மீட்போம் என்கின்ற கோசம் பல திசைகளிலுமிருந்து திரட்சி பெற்று வளர்ந்து வருவது தெரிகின்றது. இதில் எது சரியானதென்றோ எது பிழையானதென்றோ இல்லை. எல்லாமே சாராம்சத்தில்

சரியானவைதான். ஆனால் அவற்றையிட்ட தெளிவான புரிதல்கள் பலரிடம் இல்லாமையை அவதானிக்க முடிகின்றது. கிழக்கு மாகாண மக்கள் பல வழிகளிலும் அடக்கப்பட்டு முடக்கப்பட்டு கிடக்கின்றனர் என்பது உண்மை. ஒரு சமூகம் தன் ஒடுக்குமுறைக்குள்ளாவதை விட தாம் ஒடுக்கப்படுகின்றோம் என்பதை உணராத சமூகமாக கிடப்பது சாபக்கேடானது. அந்த வகையில் கிழக்கு தமிழர்கள் தாம் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு வருகின்றோம் என்பதை உணரத் தலைப்பட்டிருப்பது முக்கியமானதொரு விழிப்புணர்வாகும்.

ஆனால் 'இருந்த காக்காயை வந்த காக்காய்' துரத்துவது போல இலங்கையின் பேரினவாத சக்திகளுக்கெதிராக எழுந்த போராட்டம் இன்று வலுவிழந்த நிலையில் புதிய புதிய பிரச்சனைகள் மேலெழுந்துள்ளன. அதனூடாக பிரதான ஒடுக்குமுறையான சிங்கள பேரினவாதம் மறக்கடிக்கப்பட்டு உள்ளக முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளது. ஆனால் சிங்கள மேலாதிக்க சக்திகளின் ஒடுக்குமுறைகள் வெவ்வேறு வழிகளில் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. இவையனைத்தையும் ஒருமித்து எதிர்கொள்ளுவதென்பது எப்படி என்பதுதான் கிழக்கு மாகாண மக்கள் அனைவரின் மீதான எதிர்கால சவாலாகும். முஸ்லிம்களோடு உருவாகிவரும் முரண்பாடுகளை பலர் முஸ்லீம் மக்களுக்கெதிரான உணர்வுகளோடு அணுக முயற்சிக்கின்றனர். ஆனால் முஸ்லிம்களின் பெயரில் அரசியல் தலைமைகளாகவும் நிர்வாக அதிகாரிகளாகவும் இருக்கின்ற அதிகார வர்க்கத்தினரே நாம் எதிர்கொள்ள வேண்டியவர்களாகும். அதேபோன்று தான் யாழ்ப்பாண மேலாதிக்க அணுகுமுறை அரசியல் என்பதே நமது எதிரியாகும், மாறாக சாதாரண யாழ்ப்பாண மக்களோ,முஸ்லீம் மக்களோ நமது எதிரிகளாக இருக்க முடியாது.

அது சரி இவற்றையெல்லாம் கருத்தில் கொள்கின்ற, கையாளுகின்ற திறமைகொண்ட கிழக்கு தலைமை ஒன்று மேலெழுந்து அதிகாரத்துக்கு வருகின்றபோது கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டு விடுமா? என்பதே இன்றுள்ள கேள்வியாகும். அதிகாரத்தில் பங்கெடுப்பதென்பது அவசியமானதுதான். ஆனால் சாமானிய மக்களின் அரசியல் பிரதிநிதியாக அத்தகைய தலைமைகள் செயற்படுகின்றபோதுதான் அது அம்மக்களை மீட்டெடுப்பதாக அமைய முடியும். ஆனால் நமது கடந்த கால தலைமைகளில் பெரும்பாலானவை கட்சி நலன்களையும் சொந்த நலன்களையும் மட்டுமே முன்னுரிமைப்படுத்தினார்கள். இனவாத அணிதிரட்டலில் 'தமிழர் ஒற்றுமை' 'தமிழ் பிரதிநிதித்துவம்' என்பதையிட்டு மட்டுமே அக்கறை கொண்டனர். ஒடுக்கப்படும் சாமானியமக்கள் இவர்களால் பயனடையவில்லை.

ஏனெனில் வெகுஜன மக்கள் இன,பிரதேச அடையாளங்களினால் மட்டும் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப்படவில்லை. அவர்கள் நாளாந்த சமூக, பொருளாதார, பாலின, மற்றும் இன்னபிற சுரண்டல்களுக்கும், உள்ளாக்கப்படுகின்றார்கள்.

அவர்களது வளங்கள் உள்ளூர் முதலாளிகளையும் தாண்டி தற்போது பன்னாட்டு நிறுவங்களின் நிதி மூலதனங்கள் ஆதிக்கத்துக்குள் அகப்படத் தொடங்கியுள்ளன. என்ஜிஓக்கள், தொழில் பேட்டைகள், அபிவிருத்திகள், என்கின்ற பெயர்களில் உலகமயமாதல் எம்மையும் பீடிக்க தொடங்கியுள்ளது.

இவற்றிலிருந்தெல்லாம் எமது மக்களை எப்படி காப்பாற்ற வேண்டும் என்கின்ற குறைந்த பட்ச தேடுதல் கொண்டவர்கள் தலைமைக்கு வருவது அவசியம். அவர்களால்தான் கிழக்கை மீட்க முடியும்.

எமது மண்ணில் பெண்கள் மீதும் குழந்தைகள் மீதும் நடத்தப்படுகின்ற பாலியல் வன்முறைகளின் களமாக எமது பிரதேசங்கள் மாறிவருகின்றன.பண்பாடு குடும்பகௌரவம் என்கின்ற போர்வையில் இவையெல்லாம் அடக்கி வாசிக்கப்படுவதும் மறைக்கப்படுவதும் நடந்தேறுகின்றது. வேதனைக்குரிய இந்த நிலைமைகளை எப்படியும் மாற்றியாகவேண்டும் என்கின்ற அக்கறை கொண்ட மனிதர்கள் அதிகார பீடங்களை நோக்கி மேலெழ வேண்டும் அதுவே கிழக்கு மீட்சிக்கு வழிகாட்டும்.

போட்டி போட்டுக்கொண்டு ஆலயங்களை கட்டுகின்றோம். வானளாவிய கோயிற் கோபுரங்கள் மூலை முடுக்குகளிலேயெல்லாம் எழுந்து நிற்கின்றன. ஒவ்வொரு தமிழ் கிராமங்களின் உழைப்பும் வருடாவருடம் கோவில் திருவிழாக்களில் கொட்டி கரியாக்கப்படுகின்றன. போதாமைக்கு வெளிநாடு வாழ் தமிழர்கள் தங்கள் குடிப்பெருமை, குலப்பெருமைகளை தூக்கி நிறுத்துவதற்கு லட்ஷக்கணக்கில் கோவில்களின் அலங்காரங்களை அதிகரித்துக்கொண்டே இருக்கின்றனர். அனைத்துக்கும் மேலாக எமது எம்பிமாரின் மிகப்பெரிய சாதனைகள் கோயிலுக்கு கோடிக்கணக்கில் நிதி ஒதுக்குவது என்பதாக மாறிவருகின்றது.

'உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பே ஆலையம்' என்கிறார் திருமூலர். 'வெள்ளைநிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்றார் விபுலானந்தர்.எனவே கோயில்களை நோக்கி கொட்டப்படும் கோடிக்கணக்கான நிதிகள் அனைத்தும் விரயமானவை. இந்த நிதிவளங்களை அபிவிருத்தி நோக்கி செலுத்துவோம், சமூகநல மேம்பாடும் வாழ்வியலில் சமத்துவமும் நோக்கி செலவு செய்வோம் என்று சிந்திக்க தெரிந்த தலைவர்களாலேயே கிழக்கு விடுதலையாகும்.

காலையில் எழுந்து பள்ளிக்கு செல்லமுன்னர் ஒரு பாண்துண்டு வாங்க முடியாத குழந்தைகள் இன்னும் நமதூர்களில் உண்டு. ஒரு கனிஷ்ட பாடசாலைக்காக பல கிலோ மீற்றர்கள் நடந்து செல்லவேண்டிய நிலையில் சில குக்கிராமத்து மாணவர்கள் இன்றும் கிழக்கில் இருக்கின்றார்கள். ஒழுங்கான உடையணிந்து அலங்கரித்து அறியாத சிறுவர் சிறுமியர் இன்னும் எம்மிடையேதான் வாழ்கின்றனர். குடிநீர் இன்றி பிளாஸ்ட்டிக் குடங்களுடன் அலையும் கிராமங்கள் இந்தியாபோல்

இங்கும் அதிகரித்து வருகின்றன. இவையெல்லாம் தீர்க்கப்படாமல் நமது இனம் தலை நிமிர்ந்து வாழ முடியாது என்று வீறு கொண்டெழுகின்ற தலைவர்களாலேயேதான் கிழக்கை விடுவிக்க முடியும்.

அத்தனைக்கும் மேலாக கிழக்கு என்பது தமிழர்கள். முஸ்லிம்கள்,சிங்களவர் பறங்கியர். என்கின்ற பல்லினங்களின் சொத்தாகும். இங்கே யாரும் ஓரினத்துக்கு தலைவராக இருந்து கொண்டு கிழக்கின் தலைவராக முடியாது. ஆனால் துரதிஷ்ட வசமாக இப்போதெல்லாம் எம்மிடமிருப்பது இனத்தலைவர்களும் ஊர்த்தலைவர்களும் மட்டுமேயாகும். இந்நிலை மாற்றப்பட்டு சக இன மக்களாலும் போற்றப்படத்தக்க தலைவர்கள் உருவாக வேண்டும். ஒரு நல்லையாமாஸ்ட்டர் போல. ஒரு தேவநாயகம் போல ஒரு இராஜதுரை போல, கிழக்கை மீட்க பெருந்தலைவர்களே தேவை. எவரொருவர் எல்லா இனங்களையும் அரவணைத்து ஆட்சி செய்யும் வல்லமையை பெறுகின்றாரோ. எவரொருவரால் இனங்கள் என்கின்ற குச்சி வேலிகளைத்தாண்டி கிழக்கில் வாழும் ஒவ்வொரு குடிமகனிடத்திலும் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் சம்பாதிக்க முடிகின்றதோ அவராலேயே கிழக்கை முழுமையாக மீட்க முடியும். அதுமட்டுமல்ல மறைந்து போன மட்டக்களப்பு பொன்னுத்துரை என்கின்ற எழுத்தாளன் சொல்வான் 'ஒரு தேசப்பற்று மிக்க அரசியல்வாதி கிடைத்தால் உலக புகழ் மிக்க நகரங்களில் ஒன்றான வெனிஸ் நகருக்கு நிகராக மட்டக்களப்பு எழுந்து நிற்க முடியு'மென்று.

ஆம் அப்போதுதான் கிழக்கின் விடுதலை சாத்தியமாகும்.

# இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் - 'லண்டன்-95'

லண்டன்-95 என்கின்ற பெயரில் எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் தனது சிறுகதை தொகுதியொன்றை வெளியிடுகின்றார். இந்த நூலானது 'தேம்ஸ் நதி' வெளியீடாக வரவிருக்கின்றது. தனது சொந்த வாழ்வில் அரச பொதுசுகாதார துறை அதிகாரி,குழந்தைகள் நல அதிகாரி. என்னும் தொழில் சார்ந்து இயங்கினாலும் மானுட மருத்துவ வரலாறு, சுகாதாரக்கல்வி போன்றவற்றோடு இலக்கியம் மற்றும் திரைப்படத்துறை போன்ற பல்துறைகளை சார்ந்த ஆளுமை கொண்டவராக இவர் திகழ்கின்றார். அத்தோடிணைந்து மனிதஉரிமைகள், பாலியல் சமத்துவம் போன்றவற்றுக்காக ஓயாது குரல் கொடுத்து வருபவராக இந்த இராஜேஸ்வரி தன்னை எப்போதும் முன்னிறுத்திவருகின்றார்.

இவர் ஒரு முற்போக்கு இலக்கிய மரபினுடான எழுத்துலகின் அடையாளம் கொண்டவர். அது மட்டுமன்றி ஒரு தீவிரமான சமூக அரசியல் களப்போராளியாக இன்றுவரை இயங்கிவருகின்றார். புகலிட இலக்கியத்தின் மூல வேர்களில் ஒருவரான ராஜேஸ்வரி பலநூறு பெண்களுக்கு முன்னுதாரணமாக,ஆதர்சமாக விளங்குபவர். இலங்கையிலும் இந்தியாவிலும் பல பல்கலைக்கழக மாணவர்கள் இவரது எழுத்துக்களை தங்களது ஆய்வுக்காக எடுத்தாண்டு வருகின்றனர். அண்மையில்கூட கொங்கு நாடு கலை அறிவியற் கல்லூரி மாணவர் பிரியா 'புலம்பெயர்ந்தோர் புதினங்களில் வாழ்வியல் சிக்கல்கள்' என்னும்தலைப்பிலான ஆய்வொன்றினை ராஜேஸ்வரியின் எழுத்துக்களை ஆதாரமாக கொண்டு செய்துள்ளார். அதுவும் நூலுருப் பெற்றுள்ளது.

தற்போது வெளியாகின்ற 'லண்டன் -95 சிறுகதை தொகுதியானது ராஜேஸ்வரியினுடைய ஆறாவது சிறுகதை தொகுதியாகும். ஐந்து சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ள அவர் இதுவரை எழுதிய சிறுகதைகள் சுமார் நூறினை தாண்டும் என அறிய முடிகின்றது. தமிழ் சிறுகதைகள்.கொம் என்கிற இணையத்தில் இவரது 84கதைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை எட்டு நாவல்கள் வெளிவந்துள்ளன. இவை மட்டுமன்றி 'தாயும் சேயும்', 'உங்கள் உடல் உள நலம் பற்றி' என்கின்ற மருத்துவம் சார்ந்த நூல்களும் 'தமிழ் கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்' என்கின்ற மானுடவியல் ஆய்வு நூலும் குறிப்பிடத்தக்கன. இவற்றில் பனி பெய்யும் இரவுகள் என்கின்ற தொகுதியானது 2015ஆம் ஆண்டு மதுலகிரிய விஜயரத்ன எனும் எழுத்தாளரினால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. சில சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. விரைவில் இரு நாவல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகவுள்ளன.

எழுத்து துறையில் மட்டுமன்றி திரைப்படம் மற்றும் ஆவணத்துறையிலும் இராஜேஸ்வரி தனது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார்.1985ஆம் ஆண்டு காலத்தில் இலங்கையில் தமிழர்கள் எதிர்கொண்ட படுகொலைகளை மையமாக கொண்டு அவர் உருவாக்கிய திரைப்படம் சர்வதேச தமிழ் அகதிகளின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. **Escape from genocide** என்னும் இத்திரைப்படமானது இலங்கை தமிழர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துக்களை சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்லும் விதமாக எடுக்கப்பட்டது. அதே போன்று திருமண வாழ்வின் பெயரில் நடந்தேறும் ஆணாத்திக்க பாலியல் கொடுமைகளை அடிப்படையாக கொண்டு **'The private place'** குறும் படத்தினையும் 1986ஆம் ஆண்டில் இவர் எடுத்து வெளியிட்டார்.

அதேபோன்று உள்நாட்டு யுத்தம் அகோரமானபோது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை பக்கச்சார்பின்றி அம்பலப்படுத்துவதிலும் ராஜேஸ்வரியினுடைய மனிதஉரிமை செயற்பாடுகள் நடுநிலைவாய்ந்தனவாகவிருந்தன.

இங்கிலாந்தில் தொழிற்கட்சியின் அங்கத்தவரான இவர் ஈராக் யுத்தத்தில் இங்கிலாந்து எடுத்த பிழையான நிலைப்பாட்டை விமரிசனம் செய்து தனது தொழிற் கட்சியின்நீண்டகால உறுப்புரிமையை துறந்தார்.1982ஆம் ஆண்டில் லண்டனில் உருவாகிய தமிழ் மகளீர் அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராகவும் 1985ல் உருவாக்கிய தமிழ் அகதிகள் அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராகவும் முன்னின்று செயற்பட்டு பல்லாயிரம் இலங்கை தமிழ் அகதிகளின் நலன்களை உறுதி செய்வதில் பெரும் பங்காற்றியவர். இந்த தமிழ் அகதிகள் அமைப்பின் முதற் தலைவியாக அவ்வேளை தமிழீழத்துக்காக போராடிக்கொண்டிருந்த ஐந்து இயக்கங்களில் லண்டன் பிரதிநிதிகளும் ஒருமித்து இவரை நியமித்திருந்தனர் என்பது முக்கியமான வரலாற்றுச் செய்தியாகும்.. அதுமட்டுமன்றி சுமார் 25

வருடங்களுக்கு மேலாக புகலிடத்தில் இருந்து இயங்கிவரும் பெண்கள் சந்திப்பு, இலக்கிய சந்திப்பு போன்ற நிகழ்வுகளில் பங்கெடுத்தும், முன்னின்று நடாத்தியும் வருபவர்களில் இவரும் ஒருவர்.

இவரது எழுத்துலக சாதனைகள் அளப்பரியன. அந்த வகையில் 'விபவி' இலக்கியவிருது, 'சுபமங்களா'விருது,லில்லி தேவசிகாமணி விருது, 'திருப்பூர் தமிழ் சங்க' விருது, போன்றவை ராஜேஸ்வரிக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனபோதிலும் சுமார் ஐம்பதாண்டுகாலமாக அயராது எழுத்துலகில் இயங்கிவரும் ராஜேஸ்வரி அவர்கள் இலங்கையில் மட்டுமன்றி புகலிடத்திலும் கூட தேவையான கௌரவம் பெறவில்லை என்பது எனது கணிப்பு.

தமிழ் கூறும் நல்லுலகில் எத்தனையோ எழுத்தாளர்கள் எத்தனையோ வெளியீடுகள் என்று இலக்கிய பரப்பு இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஆனபோதிலும் அதில் ஓரிருவரே சாதனையாளர்களாக முன்னிறுத்தப்படுவர் என்பது சாதாரணமான உண்மையாகும். அந்தவகையில் மிக அதிகமாகவே எழுதி மிக குறைவாகவே கவனிக்கப்படும் ஒருவராக இந்த இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் காணப்படுகின்றார். எனவேதான் இலக்கிய உலகில் வழங்கப்பட்டு வரும் தெரிவுகளும் புகழாரங்களும் மதிப்பீடுகளும் விருதுகளும் உண்மையிலேயே இலக்கிய பிரதிகளின் சுயமான வாசிப்பு அனுபவங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டிருக்கின்றனவா? என்கின்ற கேள்விகளும் அவ்வப்போதுஎழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன

இந்த நிலையில்தான் 1970ஆம் ஆண்டு காலத்திலே புலம்பெயர்ந்து லண்டனில் குடியேறிய இவரது பூர்வீகம் என்ன? இவர் யார்? இத்தனை ஆளுமை கொண்ட இந்த பெண் எங்கிருந்து இத்தனைதூரம் பல்துறை அறிவை பெற்றுக்கொண்டாள்? என்று நோக்கவேண்டியுள்ளது. ஆம் அவரது அண்மைக்கால பேட்டியொன்றில் (குவர்னிகா- இலக்கிய சந்திப்பு தொகுப்பு வெளியீடு ) அவர் தனது பூர்வீகம் பற்றி இப்படி விபரிக்கின்றார்.

"நான் 1943ஆம் வருடம் கிழக்கு மாகாணத்தில் உள்ள கோளாவில் கிராமத்தில் பிறந்தேன். தந்தையாரின் பெயர் கந்தப்பா,தாயார் கந்தையா மாரிமுத்து. எனக்கு மூன்று சகோதரிகளும் ஆறு தம்பிகளும் உடன்பிறந்தார்கள்.கோளாவில் அழகிய சிறு கிராமம்.கிராமத்துக்கு கிழக்கே பொங்கியெழும் வங்காள விரிகுடாவும் மேற்கில் மேகம் தொடும் மலைத்தொடர்களும் அதை தழுவிக்கிடக்கும் பரந்த பச்சை வயல் வெளிகளும் தெற்கில் செல்லமாக நடைபோடும் தில்லையாறும் இருந்தன."

ஆம் அந்த தில்லையாற்றை கதை களனாக கொண்ட அவரது கதை மாந்தர்கள் உலாவரும் பிரதியே "தில்லையாற்றங் கரையில்" என்கின்ற நாவல். அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னரான மட்டக்களப்பின் சமூக,அரசியல் சூழலை நமது கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் வல்லமைவாய்ந்த ஒரு வரலாற்று புனைவு அது.

# வதங்கிடுமே வாழைச்சேனை– பெருகிவரும் ஐஸ் தொழிற்சாலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் நுழைவாசலில் அமைந்துள்ளது இந்த வாழைச்சேனை பட்டினம். நீர்வளமும் நில வளமும் மிக்க கல்குடா பிரதேசத்தின் மைய நகர் இதுவாகும். இங்கு நிறைந்து விளையும் வாழைத்தோட்டங்கள் காரணமாகவே இது வாழைச்சேனை என பெயர் பெற்றது. இந்த கல்குடா தொகுதியானது பெருந் தலைவர் நல்லையா, மற்றும் தேவநாயகம் போன்றோர் பிரநிநிதித்துவம் செய்த தொகுதியாகும். அதேபோன்று கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் சந்திரகாந்தன் கூட இந்த தொகுதியின் பிரதிநிதியாகவே அரசியலில் காலடி பதித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தலை நகரம் அமைந்துள்ள மட்டக்களப்பு தொகுதி, மற்றும் பட்டிருப்பு தொகுதிகளில் உள்ள நகரங்களை விட ஒரு பெருநகரமாக வளரக்கூடிய வாய்ப்பு கல்குடாத்தொகுதியில் அமைந்துள்ள வாழைச்சேனைக்கு உண்டு. காரணம் இங்குள்ள மீன்பிடி துறைமுகமும், இலங்கையின் முதற்தரமான பாசிக்குடா உல்லாச கடற்கரையும், அதையண்டிய ஹோட்டல் தொழிற் துறையும், இங்கு இருந்த காகித ஆலை, அதன் பின்னர் உருவான கிழக்கு பல்கலைக்கழகம் அனைத்துமே ஒரு பெரும் சமூக பொருளாதார மையமாக வாழைச்சேனையை வளர்த்தெடுக்கும் வாய்ப்புக்களை தந்துள்ளன.

ஆனால் அபிவிருத்திகளின் மறுபக்கம் அதன் பிரதிகூலங்களும் உண்டு என்கின்ற விடயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. பாசிக்குடாவை நோக்கி வருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாச பயணிகளை குறிவைத்து பல்வேறு நட்ஷத்திர விடுதிகளும் மதுச்சாலைகளும் இப்பிரதேசத்தில் பெருகி வருகின்றன. அதேபோல மீன் பதனிடுதல் மற்றும் ஹோட்டல்களின் தேவைகள் போன்ற வியாபாரங்களை ஒட்டி பலவிதமான ஐஸ் உற்பத்தி தொழிற்சாலைகளும் இங்கே

உருவாகி வருகின்றன. ஏற்கனவே வாழைச்சேனைக்கு அண்மையிலுள்ள கும்புறுமூலை எதனோல் தொழிற்சாலை (தற்காலிகமாக இதன் கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன). வாகரை இல்மனைட் தொழிற்சாலை போன்றவற்றால் சுரண்டப்படப்போகின்ற நில,நீர் வளங்கள் பற்றிய அச்சங்கள் நிறைந்துள்ளன. மேலும் இந்த ஐஸ் உற்பத்தி நிலையங்களால் இப்பிரதேசம் விரைவில் தண்ணீர் பஞ்சத்துக்குள் தள்ளப்படும் ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளது.

பொதுவாக அனைத்து தொழிற்சாலைகளிலும் மூலப்பொருட்களுடன் இணைந்தே தண்ணீர் பயன்படுத்தப்படும். ஆனால் ஐஸ் தொழிற்சாலைகளின் மூலப்பொருளே தண்ணீர்தான் என்கின்றபோது நீர் அளவு கணக்கின்றி செலவிடப் படுமென்பது உறுதி. இதனால் இத்தொழிற் சாலைகளை சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள நிலத்தடி நீரின் மட்டம் அகலபாதாளத்தை நோக்கி செல்லும். இதன்காரணமாக பொதுமக்களின் பாவனையில் உள்ள கிணறுகள் வற்றி வறண்டு போவதும் நிகழும். காலப்போக்கில் கிணறுகள் மட்டுமன்றி சுற்றுவட்டாரங்களில் உள்ள களப்புகள், குளங்கள், தோணாக்கள் போன்ற நீர்நிலைகள் கூட வறட்சியை அடைய நேரிடும்.

ஓரிரு முதலாளிகளின் வருவாய்களை அதிகரிப்பதற்காக பல்லாயிரம் பொது மக்களின் உயிராதாரமான நீருடன் நாம் விளையாட முடியாது. நீர் என்பது மனிதர்களுக்கு மட்டும் முக்கியமானதல்ல.புல்லோ பூண்டோ.புழுவோ, மரமோ, பல்மிருகமோ, பறவையோ, பாம்போ, அனைத்துக்கும் நீரென்பதே உயிராதாரமானதாகும்.

இதன்காரணமாகவே நிலத்தடி நீரை அடிப்படையாக கொண்டியங்கும் மென்பான தொழிற்சாலைகளையும் தண்ணீரை மாசுபடுத்தும் தொழில் சாலைகளையும் நிறுவனங்களையும் மூடிவிடுமாறு கோரும் விழிப்பு கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் வீதி ஊர்வலங்களும் உலகம் தழுவிய வகையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. உலகிலுள்ள பெருநகரங்கள் அனைத்தும் தமது நகர எல்லைகளுக்குள் வாழும் மக்களேயானாலும் தத்தமது சொந்த நிலங்களில் இருந்துகூட அன்றாட தேவைக்கான நீரை பெற்றுக்கொள்வதற்கு தடை விதித்துள்ளன. பொது நீர் வழங்கல்கள் ஊடாகவே மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றது. அந்த அளவு தூரத்துக்கு நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கான முயற்சிகளில் உலக நாடுகள் இறங்கியுள்ளன.

ஆனால் நாமோ நிலத்தடி நீரை வர்த்தக மயப்படுத்தும் உரிமையை மிக இலகுவாக அனுமதித்துக்கொண்டிருக்கின்றோம். வாழைச்சேனை பிரதேச சபை அமைந்துள்ள இடத்திலிருந்து வெறும் 500 மீட்டர் தூரத்துக்குள்ளாகவே இரண்டு ஐஸ்உற்பத்தி தொழிற்சாலைகள் உள்ளன.லங்கா ஐஸ் பெக்டரி,ஈஸ்டர்ன் ஐஸ் பெக்டரிஎன்னும் இந்த தொழிற்சாலைகள் வாழைச்சேனை இந்து மயானம் முன்பாக அமைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி வாழைச்சேனை பலநோக்கு கூட்டுறவு சங்கம் முன்பாக நிலத்தடி நீரை உறுஞ்சி போத்தல்களில் அடைத்து விற்பனை செய்கின்ற நிலையம் ஒன்றும் செயற்பட்டு வருகின்றது.

சுங்கான்கேணி மதுபான நிலையம் முன்பாக கூல் மேன் ஐஸ் பெக்டரி

என்னும் பெயரில் ஒரு தொழிற்சாலை உள்ளது. இந்நிலையில் இதற்கு 400 மீற்றர் இடைவெளிக்குள்ளேயே இன்னுமொரு ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வயற்காணிகளாக இருந்த இந்த நிலங்கள் நீரை வர்த்தக பொருளாக மற்றும் தொழிற்சாலைகளாக மாறிவருவது வேதனைக்குரியதாகும். வாழைச்சேனை பிரதேச சபையினர் இவற்றுக்கான அனுமதிகளை எந்த அடிப்படையில் எவ்வித மறுப்புகளுமின்றி வழங்கி வருகின்றார்கள்?

இவ்வாறான வழிகளில் உறிஞ்சப்படும் நிலத்தடி நீரை மீள பதிலீடு செய்வதற்கான சுழற்சிமுறை நீர் முகாமைத்துவம் பற்றி பிரதேச சபையினர் எவ்வளவுதூரம் கரிசனை கொண்டுள்ளனர்? மழை காலங்களில் பள்ளம் படுகுழிகளில் நிரம்பி ஆவியாகி போகின்ற நீரை நிலத்தடி நீராக சேமிக்கும் எத்தனை வழிமுறைகள் இந்த பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன? இவற்றையெல்லாம் செய்யாமல் மக்களின் உயிராதாரமான நீரை வெறும் வர்த்தக முயற்சிகளுக்கு வாரி வழங்கி விட்டு வாளாதிருத்தல் கூடாது. பிரதேச சபையின் ஆட்புல எல்லைக்குள்ளான நீர் முகாமைத்துவம் என்பது மக்களுக்கான நீராதாரத்தை உறுதி செய்வதும் நிலத்தடி நீரை பாதுகாக்கின்ற வகையிலான நீர் நிலைகளை பேணுதலும் போஷித்தலுமேயன்றி நீரை வர்த்தகம் செய்வதற்கான உரிமை சீட்டுக்களை வழங்குவதல்ல என்பதனை எமது பிரதேச சபையினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்போதே வரட்சியற்ற காலங்களின்கூட வாழைச்சேனை பிரதேசத்தில் உள்ள சில கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து வருவதாகவும் சில கிணறுகளில் நீர் வெண்ணிறமானதாக மாறி வருவதாகவும் அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். எனவே வாழைச்சேனையில் பெருகி வரும் ஐஸ் உற்பத்தி நிலையங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட அனுமதிகளை படிப்படியாக இரத்து செய்வதும் பற்றி பிரதேச சபையினர் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

மாறாக செயற்பட்டோமானால் காலப்போக்கில் எமது பிரதேசங்கள் பாலைவனங்களாக மாறிவிடும் என்கின்ற எச்சரிக்கைகளை யாரும் இலகுவானதாக கடந்து செல்ல முடியாது. ஏனெனில் மூன்றாம் உலக போரென்பது தண்ணீருக்கானதாகவே இருக்கும் என்கின்ற எதிர்வு கூரல் பொய்யானதல்ல.

மனிதனது இயற்கையை அரவணைத்து செல்லமுடியாத கண்முடித்தனமான செயற்பாடுகளால் இந்தியாவின் புண்ணிய நதிகள் என்றும் தீரா நோய்களையும் தீர்க்கும் வல்லமை கொண்ட மருத்துவ தன்மை வாய்ந்தவை என்றும் போற்றப்பட்ட கங்கை, ஜமுனை, காவேரி அனைத்துமே இன்று இறந்த நதிகளாகி விட்டன. உலக புகழ் கொண்ட லண்டன் நகரில் ஓடும் ஜேம்ஸ் நதி இறந்த நதியாகவே அறிவிக்கப் பட்டாகிவிட்டது. பாரத மாதாவின் தெய்வீக நதியென புகழப்பட்ட சரஸ்வதி நதி இருந்த தடயங்களே இன்று இல்லை. அப்படியொரு நிலைமை களப்புகளால் நிறைந்த எமது மீன்பாடும் தேனாட்டுக்கும் வந்துவிடக்கூடாது.

# ஜனாதிபதி தேர்தல் 2020
# யாரிந்த ஜேவிபியினர்

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதியுடன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுடைய ஐந்தாண்டுகால பதவி வறிதாகின்றது. அதனடிப்படையில் இலங்கையின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சிகள் தத்தமது வேட்பாளர்களை முன்னிறுத்தி பிரச்சாரங்களை ஆரம்பித்தும் விட்டன. ஆனால் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியோ பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய தேசிய கட்சியோ வேட்பாளர்களை அறிவிப்பதில் இன்னும் இழுபறி நிலையிலேயே உள்ளன.

இந்நிலைமையானது இலங்கையை கடந்த எழுபது வருடமாக மாறிமாறி ஆட்சி செய்து வரும் இருபெரும் கட்சிகளுக்கு வெளியே உள்ள வேட்பாளர்களை நோக்கி இம்முறை மக்கள் அதிக கவனம் செலுத்தும் வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. அந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் அதிக முக்கியத்துவம் பெறவுள்ளன.

புதிய கட்சியாக இருந்த போதிலும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ராஜபக்ஸ வம்சத்தின் தொடர்ச்சியாகவுள்ளது. அவர்களின் பலம்.பலவீனம் பற்றிய இரண்டு விடயங்கள் இருந்தாலும் பலவீனம் சார்ந்த குற்றச்சாட்டுக்கள் பழங்கதைகளாய் போய்விட்டன. ஆகவே அவர்களின் பலம் அதாவது மகிந்தவின் அபிவிருத்தி சாதனைகள் மீண்டும் ஒருமுறை இத்தேர்தலில் பேசுபொருளாக்கப்படும்.

அதேவேளை பழைய கட்சியாக இருந்த போதிலும் ஜேவிபி புதிய முகத்தோடு அதாவது கொள்கைசார் ரீதியிலும் தங்களை ஒரு புதிய கட்சியாக

எதிர்காலம் பற்றிய நம்பிக்கை தரும் கட்சியாக ஒரு தோற்றப்பாட்டை உருவாக்க முயல்கின்றது. வேட்பாளர் விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சி இரண்டுபடும் சந்தர்ப்பங்கள் உருவாகுமானால் எதிர்வரும் தேர்தல் முழுக்க முழுக்க வித்தியாசமானதாக இருக்கும்.காரணம் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தனித்து போட்டியிட்டாலும் அது வெற்றி வாய்ப்பை நோக்கி நகருவது என்பது எதிர்பார்க்கக் கூடியதொன்றல்ல. எனவே ராஜபக்ச வம்சத்துக்கும் ஜேவிபிக்குமிடையிலான நேரடிப்போட்டிக்கான வாய்ப்புக்கள் உருவாகும் என்று எதிர்பார்க்கலாம்.

எப்படியிருந்த போதிலும் வழமைக்கு மாறாக ஜேவிபி யும் இம்முறை நட்சத்திர வேட்பாளர்களை நோக்கி சார்பு நிலை எடுக்காமல் நேரடியாகவேகளத்தில் இறங்கியிருப்பது முக்கியமானதொன்றாகும். இதன் காரணமாக மும்முனைப் போட்டியொன்றுக்கான சூழலும் நிலவுகின்றது.

எனவே யாரிந்த ஜேவிபியினர் என்பது குறித்த புரிதல்களை நோக்கி சற்று நகருவோம். இலங்கையிலிருந்து சென்று ரஸ்யாவின் லுமும்பா பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு நாடுதிரும்பிய இருபத்தி மூன்றே வயதுமட்டும் நிரம்பிய அந்த இளைஞன் 1965ஆம் ஆண்டு இந்த அமைப்பை உருவாக்குகின்றான். நாட்டில் அனைத்து மக்களுக்குமான சோஷலிச சமத்துவ சமுதாயம் ஒன்றை உருவாக்குவதே தனது அமைப்பின் கொள்கை என அறிவிக்கின்றான். வெறும் ஐந்தே வருடங்களில் குறிப்பாக தென்னிலங்கையின் பெருந்தொகையான இளைஞர்கள் அவன் பின்னால் அணிவகுக்கின்றனர்.

சோசலிசம் குறித்து பேசிய போதிலும் இன வரையறைகளை தாண்டிய வர்க்க ஒற்றுமையொன்றை கட்டியெழுப்புவது பற்றிய செயற்பாடுகள் அவர்களிடம் இருக்கவில்லை. முழுக்க முழுக்க சிங்கள தேசியவாத சக்திகளின் சிந்தனையோட்டத்தையும் சிறுபான்மையினங்களை விடுத்து பெரும்பான்மை சிங்கள இனத்தினை அடிப்படையாக கொண்டால் மட்டுமே புரட்சிசாத்தியமாகும் என்கின்ற எளிமையான கோட்பாட்டையுமே அவர்கள் முன்னிறுத்தினர். சுருங்க சொன்னால் மாவோயிச, திரோஸ்கிய, ஸ்டாலினிச, சேகுவராயிச கலவையாக அவர்கள் சிங்கள தேசியவாதத்தை சோசலிசத்தின் பெயரில் முன்மொழிந்தனர்.

இலங்கையில் வாழ்ந்துவந்த இந்திய வர்த்தகர்களையும் . இந்திய வம்சாவளி மலையக மக்களையும் ஒரே கூடையில் வைத்து கணிப்பிட்டனர். செட்டிமார்,போராக்கள் போன்றோரது மூலதனங்களின்கீழ் உழைப்பாளிகளாக இருந்த மலையாளிகளைக்கூட தமது வர்க்க எதிரிகளாக அவர்கள் சித்தரித்தனர். மலையக மக்கள் இந்திய விஸ்த்தரிப்புவாதத்தின் ஒருபகுதியாக அதாவது செயற்படுபவர்கள் என்பதே ஜேவிபியின் பார்வையாக இருந்தது. அவர்களது அரசியல் பாசறையின் ஐந்தாம் பாடம் என்பது இந்திய மேலாதிக்கம் பற்றியதாயிருந்தது. புரட்சிக்கான காலம் நெருங்கிக்கொண்டிருந்தது.

ஆனால்-----

1971 மார்ச் மாதம் 13ஆம் திகதி அம்பாறையில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்த 70க்கும் மேற்பட்ட ஆயுதமேந்திய போலீசார் அந்த இளைஞனை கைது செய்து மட்டக்களப்பு சிறையில்அடைப்பதில்வெற்றி காணுகின்றனர். அதன்பின்னரே இலங்கையின் மூலை முடுக்குகள் எங்கும் ரோகண விஜயவீரா என்னும் பெயர் பிரபல்யமானது. தலைவரின் கைதோடு அவர்களது புரட்சிக்கான திட்டங்கள் நிர்முலமாகின்றன. மிகக்கடுமையான இராணுவ நடவடிக்கைகளால் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களை கொலைசெய்து இரண்டுவார காலங்களில் அனைத்து கிளர்ச்சிகளும் அடக்கப்பட்டு ஜேவிபி தடை செய்யப்பட்ட அமைப்பாக இலங்கையரசால் பிரகடனம் செய்யப்படுகிறது.

1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜெயவர்த்தனா அரசு ஜேவிபியை அடக்கியொடுக்கிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு எதிராக செயற்பட வேண்டுமென்கின்ற இரகசிய ஒப்பந்தத்தோடுஆயுள் காலசிறைத்தண்டனை பெற்றிருந்த ரோகண விஜயவீரா உட்பட்ட அனைத்து கைதிகளையும் விடுதலை செய்து அவர்கள் மீதான தடையையும் நீக்கியது. வெளியே வந்த அவர்கள் ஜனநாயக பாதையில் பயணித்தனர். 1982ஆம் ஆண்டுஜனாதிபதி தேர்தலில் ரோகண விஜயவீரா போட்டியிட்டார். அதில் அவர் 2.75.000வாக்குகளை(சுமார் 4 வீதமான)பெற்றார்.இத்தேர்தலில் தனது வெற்றியை மீள உறுதி செய்துகொண்ட ஜெயவர்த்தனா 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற யூலை கலவரத்துக்கு காரணமானவர்கள் இந்த ஜேவிபியினரே என்கின்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி மீண்டும் ஜேவிபியைதடை செய்து அரசியலில் இருந்து ஓரங்கட்டினார்.ஆனால் ஜேவிபியினர் மீதான யூஎன்பியின் இந்த குற்றச்சாட்டுக்களை 'பொய்யானவை'என்றும் அவர்கள் ஒருபோதும் தமிழ் மக்களுக்கோ முஸ்லீம் மக்களுக்கோ எதிரான'வகுப்புவாத கலவரங்களில் ஈடுபடவில்லை' என்றும் இலங்கையில் மூத்த அரசியல் தலைவரான என்.சண்முகதாசன்மற்றும் மாக்சிச ஆய்வாளர் குமாரி ஜெயவர்த்தன போன்றோர் சான்று பகிர்ந்துள்ளனர்.

அதன்பின்னர் இந்த ஜேவிபியின் தலைமறைவாக இயங்கத்தொடங்கினர். 1987 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மீண்டும் ஒரு கிளர்ச்சிக்கான செயற்பாடுகளில் ஜேவிபி இறங்கியது. இவ்வாண்டில் கொண்டுவரப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மிக கடுமையாக எதிர்த்த இவர்கள் இந்திய இராணுவத்தின் வருகையை ஒரு மேலாதிக்க தலையீடாக தென்னிலங்கையில் பிரச்சாரம் செய்தனர். வரலாற்றுக் காலம் தொட்டு இலங்கையை ஆக்கிரமிப்பதும் அழித்தொழிப்பதுமாக இந்தியா செலுத்தி வரும் ஆதிக்கத்தை நினைவுறுத்தி சிங்கள மக்களின் உணர்ச்சிகளை தூ ண்டி விடுவதில் வெற்றிகண்டனர். பிரேமதாசா போன்றவர்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எப்படி எதிர்த்தனரோ அதற்கும் மேலாக ஜேவிபியினரும் இந்தியாவின்

தலையீட்டை எதிர்த்தனர். இந்திய மேலாதிக்கத்துக்கும் இலங்கையின் தேசியவாதத் துக்கும் இடையில் பலிக்கடாக்களாக இலங்கை தமிழரின் உரிமை பிரச்சனை சிக்குண்டு போவதற்கு ஜேவிபியினரின் இந்த கண்முடித்தனமான இந்திய எதிர்ப்புவாதம் வழிகோலியது.

இந்திய வம்சாவளியினரான கொழும்பு தமிழர்களும் மலையக தமிழர்களும் கொண்டிருக்கின்ற இந்திய மாதிரிகளைக்கொண்ட அமைப்புக்கள்,கலாச்சார சங்கங்கள் ,இந்திய தலைவர்களுடனான தொடர்புகள் அனைத்தையும் எதிர்த்த ஜேவிபியினர் வடக்கு,கிழக்கு தமிழர்களின் சமூக கலாச்சார அரசியல் செயற்பாடுகள் அனைத்துமே இந்திய தொடர்புகளுடனானவை என்கின்ற பிழையான சூத்திரத்தை கொண்டே தமிழர்களின் உரிமை பிரச்னையை பார்த்தனர். இதன்காரணமாகவே இலங்கை தமிழரின் பிரச்சனைகளுக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையையும் எதிர்ப்பதில் தீவிரம் காட்டினர்.

தென்னிலங்கையிலும் கொலும்பிலும்கூட மாகாணசபை தேர்தல்களில் போட்டியிட்ட பலர், ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய தலைவர்கள்,போலீசார் என்று பலநூறுபேர் 1987-1989ஆம் ஆண்டு காலத்தில் ஜேவிபியினரால் கொல்லப் பட்டனர். அதுமட்டுமன்றி பல இடதுசாரி தலைவர்கள் கூட பழிவாங்கல்களுக்கு ஆளாகினர்.

**தொடர் –2**

கடந்த யூலை 18ஆம் திகதியன்று காலிமுக திடலில் இடம்பெற்ற மாபெரும் பேரணியூடாக ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளராக தோழர் அனுரா குமார திசாநாயக்க அறிமுகம் செய்யப்பட்டுள்ளார். இந்த தேர்வில் ஜேவிபி உட்பட பல்வேறு அரசியல் குழுக்கள், வெகுஜன அமைப்புகள், அறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் கலைஞர்கள் போன்ற பல்வேறுபட்ட சிவில் சமூகத்தினரும் (CIVIL SOCIETYS) தேசிய சக்தியாக ஒன்றிணைந்துள்ளனர். அவர்கள் அனைவரதும் கருத்தொருமிப்பாக கல்வி, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், விவசாயம், போக்குவரத்து, கலை, கலாச்சாரம், தேசத்தைக் கட்டியெழுப்புதல், குடியுரிமைப் பொறுப்புகள், வெளியுறவுக் கொள்கை, தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, மோசடி மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகிய அனைத்து அம்சங்களையும் கொண்ட தேசிய கொள்கை ஒன்றை ஜேவிபியினர் மக்கள் முன் வைத்துள்ளனர். அடிப்படையில் இடதுசாரிய பாரம்பரியம் மிக்க ஜேவிபியினர் இனப்பிரச்சனை என்கின்ற விடயத்தை விட இத்தகைய சமூக பொருளாதார மேம்பாடு குறித்த கொள்கைகளை முன்வைப்பது இயல்பானதே.

ஆனால் முக்கிய தமிழ் கட்சிகளின் செயற்பாடுகளையும் எதிர்பார்ப்புகளையும் பொறுத்தவரையில் இந்த கொள்கை முன்மொழிவுகள் எதிர்மாறானவையாகும்.

இடது சாரிகள் போன்று சாமானிய மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சனைகளை அரசியலில் ஒருபோதும் தமிழரசு கட்சி போன்றவை முன்னிறுத்து வதில்லை. பாரம்பரியமாக வலதுசாரி மேட்டுக்குடிகளாக இருக்கின்ற கறுவாத்தோட்ட 'கனவான்களே' தமிழ் அரசியலை வழிநடத்துபவர்களாக இருப்பதே இதற்கு காரணமாகும். இனவாத அணிதிரட்டல் மட்டுமே அவர்களது நீண்டகால அரசியல் மூலதனமாக இருந்துவருகின்றது.எனவேதான் தமிழரசு கட்சியினர் ஒரு போதும் இடதுசாரி சிந்தனைகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சனை சார்ந்து வலதுசாரி பேரினவாத கட்சிகள் மாறி மாறி வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றியே வருகின்றன. இந்நிலை இம்முறையும் தொடருகின்றது.பேரினவாத கட்சிகளை பொறுத்தவரையில் இத்தேர்தல் ஊடாக வடக்கு கிழக்கு இணைப்பு, சமஸ்டி தீர்வு,மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள், அரசியல் கைதிகள் விடுதலை என்கின்ற பதங்கள் தமிழ் மக்களிடையே மீண்டுமொருமுறை பேசு பொருளாக்கப்படுகின்றன. ஆனால் அவைகள் வெறும் வாக்குறுதிகள் மட்டுமேயாகும் என்பதை கடந்த காலங்கள் பலமுறை நிரூபித்துள்ளன.

ஜேவிபியோ இவை குறித்து எவ்வித வாக்குறுதிகளையும் வழங்க தயாரில்லாத நிலையில் காணப்படுகின்றது. சமூக பொருளாதார சமத்துவம் நோக்கி கட்டியெழுப்பப்படும் ஒரு நல்லாட்சி (good governance) ஊடாக இனப்பிரச்சனைக்கான தீர்வு என்கின்ற கோரிக்கையை தாண்டி செல்ல முடியும் எனும் கோட்பாடு அவர்களுடையது. இதனை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள்? வெற்று வாக்குறுதிகளை வழங்குவதை விட நடைமுறை சாத்தியமான விடயங்களை பேசுவது என்கின்ற அரசியல் நேர்மை ஜேவிபியினரிடம் இருப்பதை ஏன் நாம் அடையாளம் காணுவதில்லை? என்கின்ற கேள்விகள் முக்கியமானவையாகும்.

ஒரு புறம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றி போலியாக பேசிக்கொண்டு மறுபுறம் 'இது சிங்களவர்களுக்கு மட்டுமே உரிய பூர்வீக நாடு' என்று இனவாதம் பேசும் சக்திகளுடன் கரம்கோர்த்துக்கொண்டு அரசியல் செய்வதே பேரினவாத கட்சிகளின் இரட்டை நிலைப்பாடாகும். இது குறித்து தமிழ்-மற்றும் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகள் ஒரு போதும் கவலை கொள்வதில்லை. ஆனால் 'பூர்வீகம் பற்றி பேசுவது அர்த்தமற்றது இது எல்லா இனங்களுக்கும் உரிய நாடு' என்று சிங்களவர்கள் முன்னிலையிலும் அடித்து பேசுகின்ற தற்றுணிவு கொண்டவராக ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரா குமாரதிசாநாயக்க போன்றவர்கள் இன்று எழுந்து நிற்கின்றனர். இது உண்மையிலேயே சிறுபான்மை மக்களுக்கு எதிர்கால இலங்கை பற்றிய நம்பிக்கைதரும் முன்னுதாரணமாகும் என நாம் ஏன் கருத தயங்குகின்றோம்.

'வருவார் ஆனால் வரமாட்டார்'என்று திரிசங்கு சொர்க்க நிலையில் இருக்கின்ற தலைவர்களுடனெல்லாம் ஓடியோடி முன்புறமாகவும் பின்புறமாகவும்

பேசுகின்ற சிறுபான்மை கட்சிகளில் ஏதேனும் இதுவரையில் ஜேவிபியுடன் ஒருபுரிந்துணர்வுக்காவது பேசமுன்வந்ததாக தகவல்களில்லை.

கடந்த 70 ஆண்டு காலமாக இலங்கையை ஆண்டுவரும் ஆட்சியாளர்கள் ஊழல்களாலும் லஞ்சங்களினாலும் நாட்டை குட்டி சுவராக்கிவிட்டனர் என்பது நாடறிந்த உண்மையாகும். இந்நிலையில் ஊழலற்ற ஆட்சியொன்றை ஸ்தாபித்தல் என்பது ஜேவிபியினரின் முன்மொழிவுகளில் முக்கியமானதொன்றாகும். அதற்கான நன்னடத்தையையும் முன்னுதாரணத்தையும் அவர்கள் மகிந்த ஆட்சிக்காலத்தில் மந்திரிசபையில் பங்கெடுத்த வேளைகளில் நிரூபித்துமுள்ளனர். கோடிக்கணக்கில் சம்பாதிப்பதற்காகவே தீர்வையற்ற வாகன சலுகைகளுக்காக அலையும் தமிழ் எம்பிமார்களை விட மக்கள் பணத்தை வீணாக்க மாட்டோம் என்று அந்த சலுகைகளை பெற்றுக்கொள்ள மறுப்பதையே ஜேவிபி தனது கொள்கையாக கொண்டிருப்பதை நம்மில் எத்தனைபேர் அறிந்திருக்கின்றோம். அரசியல் பதவிகளால் பெறப்படுகின்ற சம்பளங்களைக்கூட கட்சி நிதிக்கு வழங்கிவிட்டு கட்சி மீள வழங்குகின்ற மாதாந்த படியுடன்தான் அனைத்து ஜேவிபியினரும் வாழ்கின்றார்கள் என்பது எத்துணை சிறப்பான முன்மாதிரி? ஆனால் நிதி மோசடி வழக்கில் சிக்கித்தவிக்கின்ற முன்னாள் ஆட்சியாளர்களையும் ஆட்சிக்கு வந்து அடுத்த வாரமே மத்திய வங்கியை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் இருக்கும் இந்நாள் ஆட்சியாளர்களையும் தவிர்த்து ஊழலற்ற ஆட்சியொன்றை உருவாக்கும் பணியில் முன்நிற்கும் ஜேவிபியினர் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை தருகின்றனர் என்பது பொய்யல்லவே.

சட்டத்துக்கு முரணாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கான வழக்கை தாக்கல் செய்தவர்கள் இந்த ஜேவிபியினரே என்கின்ற குற்றச்சாட்டுக்களை பரவலாக தமிழ் ஊடகங்கள் பரப்பி வருகின்றன. அதனூடாக அவர்களை இனவாதிகளெனவும் சித்தரிக்க அவைகள் தவறுவதில்லை. தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்த ஆட்சியாளர்கள் அனைவருடனும் தமிழ் கட்சிகள் மீண்டும் மீண்டும் பேச முடியுமென்றால் ஜேவிபியினர் மட்டும் எந்த அடிப்படையில் விதிவிலக்கானவர்கள்? தங்களது சிங்கள வாக்குகள் ஊடாக கிடைத்த தேசிய பட்டியல் எம்பி பதவியைகூட தமிழரான தோழர் சந்திரசேகரத்துக்கு இரு முறை வழங்கியது இந்த ஜேவிபிதான் என்பதை எந்த பத்திரிகையும் சிலாகித்து எழுதுவதில்லை. அது மட்டுமன்றி சிறுபான்மை முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் நோக்கில் அஞ்சான் உம்மா என்கின்ற ஒரு பெண்ணுக்கும் அந்த தேசிய பட்டியல் எம்பி பதவியை ஒரு முறை வழங்கி கௌரவித்தது இந்த ஜேவிபி என்பதை நாம் இலகுவாக மறந்துவிட செய்கின்றன தமிழ் ஊடகங்கள்.

எப்படியிருந்தபோதிலும் ஊழலுக்கு எதிரானவர்கள் என்கின்ற நம்பிக்கையை சிறுபான்மையினரிடத்திலும் ஜேவிபியினர் பெற்றிருக்கின்றனர். எனினும் நாட்டில்

புரையோடிப்போயிருக்கும் பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்துக்கு எதிராக அவர்கள் பயணிக்க இன்னும் நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளதுஎன்பதே உண்மையாகும். 'இலங்கையராய் நாமிருப்போம் எம்மிடையே வேறுபாடுகள் இல்லை'என்பதை மகிந்தவும் ரணிலும் கூடத்தான் சொல்கின்றனர். ஆனால் அவர்களால் மட்டுமல்ல ஜேவிபியினாலும் கூட இலங்கையின் பெரும்பான்மையினராக வாழும் பௌத்த சிங்களவர்களுக்கு அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையில் கைவைக்க முடியாது என்பது உறுதி. ஒரு பல்லின மக்களின் தேசமே இலங்கை என்கின்ற நம்பிக்கையை சிறுபான்மையினரிடத்தில் ஏற்படுத்துவதாக இருந்தால் அது ஒரு யாப்பு மாற்றத்தினுடாகவே அது சாத்தியமாகும். அதில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுகின்றதா? அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படுகின்றதா? என்பதை விட இலங்கையானது மதச்சார்பற்ற ஒருநாடு (யெவழைெ ழக ளுநஉரடயசளைஅ) என பிரகடனம் செய்யப்படுகின்றதா என்பதே முக்கியமானதாகும். இது போன்ற விடயங்களை நோக்கிய உரையாடல்களை வளர்த்துக்கொள்வதற்காகவேனும் சிறுபான்மை இனங்களினை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் மற்றும் இடதுசாரிய முற்போக்கு சக்திகள் ஜேவிபியினருடன் உறவுகொள்ள தயாராகவேண்டும். அதற்கு தொடக்கமான தருணமாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை ஏன் பயன்படுத்தக்கூடாது.

# பழிவாங்கும் மனநிலையில் தேர்தலை அணுகலாமா?

தேர்தல் என்பது மக்களின் ஆணைகளை தமது பிரதி நிதிகளுக்கு வழங்குகின்ற செயற்பாடாகும். அதன்படி 'எதிர்காலத்தில் சரியானதும் பொறுப்பு மிக்கதுமான தலைமைத்துவத்தை வழங்குவார்' என்று எதிர்பார்க்கின்ற அல்லது நம்புகின்ற ஒருவரை நோக்கியே மக்களின் ஆணை வழங்கப்படுவது இயல்பானதாகும். அதுவே சரியானதும் கூட.

ஆனால் துரதிஷ்டவசமாக கடந்த காலங்களின் அரசியல் ரீதியிலும் சரி ஆயுத ரீதியிலும் சரி எமது பார்வையானது எதிர்காலத்தையன்றி கடந்த கால பழிவாங்கும் அரசியலை நோக்கியே வழிநடத்தப்பட்டு வருகின்றது. இந்திய அமைதி காக்கும் படையின் அத்து மீறல்களுக்கு பழி வாங்குவதாக எண்ணி ராஜீவ் காந்தியை பழிவாங்கினோம். ஆனால் அந்த கொலையால் தமிழனத்துக்கு ஏதாவது நன்மை கிடைத்ததா என்றால் இல்லை. மாறாக இந்திய அரசு ஈழத்தமிழர்கள் மீது கொண்டிருந்த சாதகமான நிலைப்பாட்டை நாம் இழக்க நேரிட்டது. அதனால்தான் இறுதி யுத்த நேரத்தில் கூட இந்தியா எமது மக்களின் அழிவைக்கூட தடுக்க முன் வரவில்லை.

அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களை கொன்றதன் ஊடாக தமிழர்களின் அரசியல் போக்கு எதிர்கொண்ட அல்லது இன்றும் கொள்ள நேருகின்ற மிக பெரிய இராஜதந்திர சிக்கல்களில் முக்கிய வகிபாகமொன்றை வழங்கியிருக்கூடிய ஒரு சிறந்த இராஜதந்திரியை நாம் இழந்தோம்.

அதேபோலத்தான் 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்சவை பழிவாங்குவோம் என்று சூளுரைத்தோம். அதனிமித்தம்

அவரது போட்டியாளரான சரத் பொன்சேகாவை ஆதரித்தோம். இறுதி யுத்தத்தை முன்னின்று நடத்திய இராணுவ தளபதியை ஆதரித்தன் மூலம் சர்வதேசத்திடம் யுத்தக்குற்றங்களுக்கான நீதியை கோருவதற்கான அருகதையை இழந்தோம். இலங்கையரசு மீதான யுத்தக்குற்றசாட்டுக்கள் நீர்த்து போனமைக்கு அதுவே முக்கிய காரணியாகும்.

எனவேதான் பழிவாங்கும் மனோபாவமும் தனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்கின்ற மூர்க்கத்தனமும் அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல. அவை வேண்டுமானால் தெருச்சண்டியர்களுக்கு சரியானதாக இருக்கலாம். ஆனால் அரசியல் என்பது மக்களின் வாழ்வு சம்பந்தப்பட்டது. அவர்களின் எதிர்காலம் சம்பந்தமானது. பழிவாங்கும் மனோபாவம் என்பது அரசியல் முதிர்ச்சியின் அடையாளமல்ல. நமக்கு காரியங்கள் சித்தியாக வேண்டுமானால் ஒருசிறந்தராஜதந்திர நகர்வுகளே அவசியமானவையாகும். ஒரு சரியான அரசியல் தலைமையின் இராஜதந்திர நகர்வுகளில் பழிவாங்கும் மனோபாவம் என்பது ஒரு போதும் ஆரோக்கியமான அணுகு முறையாக இடம்பிடிக்க முடியாது. காரிய சித்தி மட்டுமே அதன் குறிக்கோளாய் இருக்க வேண்டும்.

எனவே கடந்த யுத்த கால அழிவுகளையும் இழப்புகளையும் பேசிப்பேசியே நாம் காலங்களை இன்னும் வீணடித்துக் கொண்டிருக்க முடியாது. பழிக்கு பழி, கத்திக்கு கத்தி, கண்ணுக்கு கண் என்று எல்லோரும் எண்ணியிருந்தால் இப்பூவுலகில் இன்று எல்லோரும் கண்களற்ற குருடர்களாகவே அலைந்து திரிய நேர்த்திருக்கும். எமது நாடு எதிர்கொண்ட அழிவுகளுக்கு நாமனைவருமே பொறுப்பானவர்களாகும். நம்மிடையே உள்ள அல்லது அரசியல் செய்கின்ற அனைத்து தரப்பினருமே எமது மக்களின் அழிவுகளுக்கு ஏதோ ஒரு வகையில் பொறுப்பு சொல்ல வேண்டியவர் கள்தான். ஆகவே பழங்கதைகளை ஒரு புறம் மூட்டை கட்டி வைப்போம். நாளை நடக்கபோவதையிட்டு சிந்திப்போம்.எதிர்காலத்தை எப்படி ஒளிமயமாக்குவது என்பதையிட்டு அக்கறை கொள்வோம். இன்றைய எமது இளம் சந்ததிகள் வளர்ந்து வரும் நவீன உலகுடன் போட்டியிட்டு முன்னேறுவதற்கான வாய்ப்புகளை வழங்க முயல்வோம். புதிய தேசமொன்றை கட்டியெழுப்பும் பணியில் அனைவரும் ஒருமித்து கை கோர்ப்போம்.

இத்தேர்தலை எதிர்கொள்ள முதலில் நாம் சில விடயங்களை கவனிக்க வேண்டும்.

1. சிங்கள பேரினவாத கட்சிகள் தரப்பினரை பொறுத்த வரையில் அது யாராக இருந்தாலும் அவர்கள் தமிழர்கள் மீது வன்முறைகளை நிகழ்த்தியுள்ளனர். ஒடுக்கு முறைகளை செய்துள்ளனர். எம்மக்கள் மீது காலத்துக்கு காலம் பல

படுகொலைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதில் மகிந்த தரப்பினர் அல்லது சஜித் பிரேமதாசா அல்லது ஜேஆர்.ரணில், சந்திரிகா பண்டாரநாயக்க போன்ற எவரும் விதிவிலக்கில்லை.

2. தேர்தலில் முன்னணியில் உள்ள எந்த தலைமையும் அல்லது எந்தவொருவர் ஜனாதிபதியாக வந்தாலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது ஒரு போதும் சாத்தியமற்றதொன்று.அவர்களில் யாரேனும் வடக்கு கிழக்கை இணைத்து எவ்விதமான புதியதொரு தீர்வு திட்டத்தையும் எமக்கு தரப்போவதில்லை.

ஆனால் நாம் விரும்பியோ விரும்பாமலோ இத்தகைய தலைமைகளின் தொடர்ச்சியான ஒருவரே ஜனாதிபதியாக வரப்போவது நிச்சயமாகும். ஆகவே எமது மக்கள் எதிர்கொள்ள நேர்ந்த அழிவுகளையும் உயிரிழப்புகளையும் அழிவுகளையும் பற்றி நாம் எத்தனை காலத்துக்கு பேசிக்கொண்டேயிருக்க போகின்றோம்? என்கின்ற கேள்வியை எழுப்புதல் இன்று அவசியமானதொன்றாகும். அத்தகைய சிந்தனை முறை ஒன்றே நாம் எதிர்காலம் நோக்கி முன்னோக்கி நகர்வதற்கான வழிமுறையாக இருக்க முடியும்.

சாத்தியமாகாத அல்லது நீண்டகால அடிப்படையான கோரிக்கைகளுக்காக நமது கண்முன்னே எதிர்கொள்கின்ற வாழ்க்கைப் போராட்டங்களை ஒதுக்கிவிட முடியாது. கொள்கைகள், கோட்பாடுகள், தத்துவங்கள் அனைத்தும் மக்கள் வாழ்வதற்கே அன்றி மக்களின் இருப்பே கேள்விக்குறியாக நிற்கின்ற அவலவாழ்வினை அலங்கரிப்பதற்கல்ல. எனவேதான் பழிவாங்கும் மனோபாவத்தையும் காலம் கடந்துபோன கொள்கைகளையும் சற்றேனும் கைவிட்டு இன்றைய தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் நடைமுறைச்சாத்தியமான விடயங்களில் எத்தகைய தலைமையை பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்பது குறித்தே நாம் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. யுத்தம் முடிந்து பத்துவருடங்கள் சென்று விட்டது. இந்த இடைவெளியில் இரண்டு வெவ்வேறு விதமான ஆட்சியாளர்களை கடந்து வந்துள்ளோம்.

» யுத்த அழிவுகளில் இருந்து எந்த ஆட்சியாளர்கள் எமது மண்ணை புது பொலிவுற செய்தனர்?
» இதில் யாரால் கிழக்கு தமிழர்கள் நன்மையடைந்தனர்?
» யாருடைய ஆட்சியில் கிழக்கு தமிழர்களுக்கு ஓரவஞ்சனை இழைக்கப்பட்டது?

என்கின்ற கேள்விகளுக்கு விடை காண முயல்வோம்.

இன்றோ கிழக்கு மாகாணத்தின் பிரச்சனைகள் விசேடமானவை. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்து கொண்டு தமிழ் தலைவர்களெடுக்கும் தீர்மானங்கள்

கடந்த காலங்களில் தோல்வியை கண்டுள்ளன. அது மட்டுமன்றி எமது மக்களின் அவல வாழ்வுக்கு அத்தகைய முடிவுகளே காரணமாய் அமைந்துள்ளன.

எனவேதான் பாரதி சொன்னதுபோல் 'இனி ஒரு விதி செய்வோம்' கிழக்கில் இருப்பவர்களே கிழக்கு மாகாண அரசியலை பற்றிய முடிவுகளை எடுக்க முடியும் என்று உறுதி கொள்வோம்.

அதனுடாக கிழக்கு தமிழர்கள் ஒரு புதிய பாதையை நோக்கி முன்னேறுவோம். இல்லாவிட்டால் எமது எதிர்காலம் சூனியமாகி விடுவதை யாராலும் தடுக்க முடியாது போய் விடும் என்பது மட்டும் நிச்சயம்.

# மலையகமும் நல்லாட்சியும் கற்றுத்தரும் பாடம்

தமிழர் முற்போக்கு கூட்டணியின் சார்பிலான நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜா அண்மையில் தெரிவித்த ஒரு கருத்து கிழக்கு மக்களால் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதோன்றாகும்.

"ஒரு உப பிரதேச செயலக தரமுயர்த்தலுக்கு கிழக்கில் போராடும் போது மலையகத்தில் ஐந்து சபைகளை வென்றெடுத்துள்ளோம்."என்கின்றவாறாக அவர் உரையாற்றியுள்ளார்.

அடுத்தவர்கள் எமது சாதனைகளை முன்னுதாரணமாக எடுத்துக்காட்டி பேசுமிடத்தில் நாமில்லை என்பது இச்செய்தியின் மூலம் பகிரங்கமாவது வேதனைக் குரியதுதான். இதற்கு காரணம் நாம் பின்பற்றுகின்ற அரசியல் பாதையின் தோல்விகளே ஆகும். ஆனால் காற்றுள்ளேபோதே தூற்றிக்கொள்கின்ற வகையில் முஸ்லீம் தலைமைகளும்,மலையக தலைமைகளும் சாதனைகள் புரிந்து வருகின்றார்கள். போட்டி போட்டுக்கொண்டு அபிவிருத்திகளை முன்னெடுக்கின்றார்கள். அவர்களுக் குள் யாரும் யாரையும் துரோகி என்று சொல்வதில்லை. அரசுடன் இணைந்து அதிகாரத்தில் பங்கெடுப்பதை அந்த மக்களும் வெறுப்பதில்லை. மாறாக அதையே தமது அரசியல் தலைவர்களிடம் அவர்கள் வேண்டுகின்றார்கள்.

ஆனால் நாமோ இலங்கை தேசியத்துடன் ஐக்கியமாவதை நோக்குகின்ற விதம் வேறானது. காரணம் நமது அரசியல் பாதையை வழிநடத்திய தமிழ் தேசியம் என்னும் கருத்தியலில் இருந்து நாமும் நமது தலைமைகளும் விடுபட தயங்கி வருகின்றோம். அதற்கு காரணம் தமிழ் தேசியம் என்பதையிட்டு நாம் தவறான புரிதல்களை கொண்டுள்ளோம். தமிழ் தேசியத்தை காப்பாற்றுவதென்பது முதலில்

சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதுதான் என்பது மரபார்ந்த அரசியல் தலைமைகளால் மூடி மறைக்கப்படுகின்றது. அரசியல் தீர்வு என்பது மட்டுமே தேசியமல்ல. சமூக,பொருளாதார, கல்வி,கலாசார விடயங்களில் அபிவிவிருத்தி காணாத ஒரு இனமும் தனது தேசியத்தை வளர்க்க முடியாது. தமிழ் தேசியம் என்பதையும் இலங்கை தேசியத்தையும் ஒன்றுக்கொன்று எதிரானதாக நிறுத்திப் பார்க்கின்ற கருத்தியல் மாயையில் வடக்கு,கிழக்கு தமிழர்கள் மட்டுமே மூழ்கிக் கிடக்கின்றனர்.

ஆனால் இலங்கை தேசியத்திலும் அதன் அதிகார கட்டமைப்புக்களிலும் பங்கெடுப்பதன் ஊடாகவே முஸ்லீம் தேசியமும்,மலையக தேசியமும் நிமிர்ந்து நிற்கின்றன. இதுவே கள யதார்த்தமாகும்.மாறாக அரச அதிகாரங்களில் பங்கெடுப்பது தமிழ் தேசியத்துக்கு துரோகமானதாகும் என்றால் தேர்தல்களில் போட்டியிடுவதை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவையும் அரச அதிகாரத்தை நிறுவுகின்ற கட்டமைப்புக்கள்தான்.ஒவ்வொரு உள்ளூராட்சி சபை உறுப்பினர் களும்,ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கையின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பேன் என்று உறுதி கூறித்தான் பதவி பிரமாணம் எடுக்கின்றார்கள். அப்படியென்றால் இவைகளும் தமிழ் தேசியத்துக்கு எதிரானவைதான். ஆனால் இவற்றையெல்லாம் செய்துகொண்டு மக்களை பணியாற்றும் பெருவாய்ப்புள்ள அமைச்சரவையிலும் அரசிலும் பங்கெடுக்க தயங்கிவருவது மட்டும் விந்தையானது மட்டுமன்றி அப்படி செய்வோரை தமிழ் தேசிய துரோகிகள் என விழிப்பதும் விசித்திரமானதாகும்.

இந்த வகையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். ஒருவகையில் தாம் முழுமையாக இலங்கை தேசியத்துடன் கலந்து விட வில்லை என்கின்ற ஒரு முகமூடி தோற்றத்தை வெளிக்காட்டும் முனைப்பாகும். இது ஒருவித துணைத் தேசிய உள்ளுணர்வு கொண்ட உளவியல் (sub national bias) நோயாகும். ஆனால் இந்த நோய் கூறுகள் வடக்கு கிழக்கு தமிழர்களை தவிர ஏனைய இனங்க ளிடம் செல்வாக்கு செலுத்துவதில்லை.எனவேதான் கடந்த காலங்களில் தொண்டமான் போன்றோரும் இன்று தமிழ் முற்போக்கு கூட்டணியினரும் அரசில் இணைந்து அமைச்சரவையில் பங்கெடுத்து வருவதன் ஊடாக வியத்தகு சாதனைகளை புரிந்து வருகின்றனர்.

இந்த நல்லாட்சி அரசில் மலையகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளை கண்டுள்ளது. 2015ஆம் ஆண்டுதான் பாராளுமன்ற பொது தேர்தலுக்கு முன்பாக ஜனநாயக மக்கள் முன்னணி,மலையக மக்கள் முன்னணி,மற்றும் தொழிலாளர் தேசிய காங்கிரஸ் போன்றவை இணைந்து தமிழர் முற்போக்கு கூட்டணியை உருவாக்கினார்கள். 2015ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறப்போகும் என எதிர்பார்க்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்தும் அவர்களோடு

இணைந்தும் போட்டியிட்டதனுடாக அதுவரை காலமும் மலையகத்தின் பெரும் அரசியல் சக்தியாக திகழ்ந்த தோட்ட தொழிலாளர் காங்கிரசை இந்த கூட்டணி ஓரம் கட்டி ஏழு உறுப்பினர்களை பெற்றனர். அதற்கு துணையாக மலையக மக்களும் தொண்டமான் தலைமையிலான தோட்ட தொழிலாளர் காங்கிரசுக்கு பல தசாப்தங்களாக வழங்கிவந்த ஆதரவை விடுத்து மாற்றுக்களை தேடி வாக்களித்தனர். அதனுடாகவே இன்று மலையகம் புதியதும் செயலூக்கம் மிக்கதுமான இளம் தலைமைகளை பெற்றுள்ளது.

'வெல்கின்ற குதிரை நம்முடையது' என்பதாக எப்படி முஸ்லீம் தலைமைகள் செயற்பட்டு அதிகார பீடங்களில் அமர்கின்றார்களோ அதேபோன்று இன்று மலையகமும் விழித்துக்கொண்டுள்ளது.தொண்டைமானின் பின்னால் தொடர்ச்சியாக முழு மலையக மக்களும் நின்றிருப்பார்களேயானால் மகிந்த தரப்பினரின் தோல்வியுடன் இன்று மலையகத்தில் அமைச்சர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் நாமே இன்னும் ஒற்றையடிப்பாதையில் நடந்துகொண்டிருக்கின்றோம். ஒற்றையடி பாதையில் சென்றால் ஒருபோதும் திரும்பி வர முடியாது என்கின்ற சாதாரண உண்மையைக்கூட புரிந்து கொள்ளமுடியாதவர்களாக நாமிருக்கின்றோம்.

இந்த அரசாங்கத்தில் 84 அமைச்சர்கள் இருக்கின்றனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள 45 அமைச்சர்களும், 19 இராஜங்க அமைச்சர்களும், 20 பிரதியமைச்சர்களும் இதில் அடங்குவர். அதனடிப்படையில் மலையக மக்கள் சார்பிலான உறுப்பினர்களில் ஒருவர் இராஜாங்க அமைச்சராகவும் மூவர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகவும் பதவி வகிக்கின்றனர். மலையகத்துக்கு அமைச்சர்கள் உண்டு.முஸ்லிம்களுக்கு அமைச்சர்கள் உண்டு. வடக்கு தமிழர்களுக்கு ஒரு அமைச்சராவது உண்டு. வியஜகலா மகேஸ்வரனை வடக்கில் யாரும் துரோகி என்று சொல்வதில்லை. ஆனால் கிழக்கு தமிழர்கள் மட்டுமே எவ்விதமான அமைச்சர்களும் இன்றி வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். இதற்கு காரணம் என்ன அதிகாரத்தில் பங்கெடுப்பதற்குத்தானே மக்கள் வாக்களிக்கின்றனர். ஆனால் நாம் தமிழர்களின் ஒற்றுமையின் பெயரில் அளித்து வரும் வாக்குகள் ஊடாக வெறும் 'சோலைக்காட்டு பொம்மைகள்' போன்ற எம்பிக்களை மட்டுமே உருவாக்கி வைத்துள்ளோம்..

மலையகத்தில் இதுவரைகாலமும் ஆங்கிலேயர்காலத்து அடிமை சின்னமான லயங்களே கதி என்று கிடந்தவர்களுக்கு ஒரு அங்குல நிலம் கூட சொந்தம்கிடையாது. ஒரு அறையை மட்டும் கொண்ட அந்த லயங்களுக்குள்தான் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வாழ்கின்றனர், உண்ணுவதும் உறங்குவதும்,உடை மாற்றுவதும் கூட அங்குதான் வயது வந்த பிள்ளைகளுக்கும் இதே நிலைதான். அந்த லயங்களுக்குள் பிரதேச சபைகள்கூட மூக்கு நுழைக்க முடியாத அளவுக்கு தோட்ட துரைமாரின் முழு அதிகாரங்களுக்குள் முடங்கி கிடந்தன. ஆனால் அண்மையில் 1987ஆம்

ஆண்டு பிரதேச சபை சட்டத்தை திருத்தி 2018ஆம் ஆண்டு 30 தாம் இலக்க சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் ஊடாக அந்த லயங்கள் தேசிய ரீதியில் இப்போதுதான் முதன்முதலாக நாட்டில் ஒரு அங்கமாக உள்வாங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் உருவாக்கப்பட்ட பெருந்தோட்ட பிராந்திய அதிகார சபையின் உருவாக்கமும் இன்று அங்கே உருவாக்கப்பட்டுவரும் நூற்றுக்கும் மேற்பட்ட புதிய கிராமங்களின் தோற்றமும் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். இந்த புதிய கிராமங்கள் என்பன நமது பகுதிகளை போலன்றி வரலாற்றிலேயே ஓரடி நிலம் கூட சொந்தமாக வைத்திராத மலையக மக்களுக்கு பெரும் வரப்பிரசாதங்கள் ஆகும். இதுவரை 5000-6000 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் நான்கு புதிய பிரதேச சபைகளை உருவாக்கியமை. தேசிய ஆட்பதிவு திணைக்களத்தின் கிளை காரியாலயத்தை அமைத்தமை.தேசிய அடையாள அட்டைகளில் மலையக வம்சாவளி மக்களை வேறு படுத்தி அடையாளம் கட்டி வந்த 'ஒ' என்னும் அடையாளத்தை நீக்கி எல்லாவித இலங்கையருக்கும் உரிய அந்தஸ்தை மீட்டெடுத்தமை.பெருந்தோட்ட சுகாதார சேவைகளை தேசிய சுகாதார முறைமைக்குள் முதன்முறையாக உள்வாங்க வைத்தமை.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என 1996ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவந்தபோதிலும் 2009ஆம் ஆண்டு அந்த அமைச்சு இல்லாமலாக்கப்பட்டது. அதனை மீண்டும் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சு என்கின்ற பெயரில் உருவாக்கியமை. இப்போது "தோட்டமோ" "தோட்டக்காட்டானோ" அல்ல மலைநாடு மலைநாட்டு மக்கள் என்கின்ற தொனிக்கு அரச அங்கீகாரம் பெற்றுத்தந்தமை என்று பலவிதமான வளர்ச்சிகளை இன்று மலையகம் கண்டு வருகின்றது.

வெறும் ஆறோ ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு அவர்களால் குறித்த நான்காண்டுகளுக்குள் இத்தனையையும் சாதிக்க முடியுமானால் நம்மால் அது ஏன் முடியாமல் போனது. இந்த நல்லாட்சி நமக்கு பெற்றுத்தந்தனென்ன?

# கிழக்கின் வழி
# தனி வழியாக இருக்க வேண்டும்

இனியொரு விதி செய்வோம்

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒருவாரகாலமே எஞ்சியிருக்கின்றது. தேசத்து குடிமக்கள் அனைவரும் அடுத்த அரச தலைவரை தெரிவு செய்வதற்காக ஒரு திடமான முடிவை எடுக்க வேண்டிய தருணங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

நாட்டு மக்கள் அனைவரும் தத்தமது இனம் சார்ந்தும் பிரதேசம் சார்ந்தும் சூழலுக்கு ஏற்றாற்போல் வெவ்வேறு விதமாக சிந்தித்து முடிவு எடுத்து வருகின்றனர். வெளிநாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பிய தேசங்களிலும் வாழும் அரசியல் மேதாவிகள் தேசியம், சுயநிர்ணயம்,தாயகம் என்று கற்பனை குதிரைகளை பறக்க விட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அவரவர் வாழும் சூழலும் அதையொட்டிய தேவைகளுமே சிந்தனைகளையும் தீர்மானிக்கின்றன. எனவே இத்தேர்தல் குறித்த எமது சிந்தனைகள் கிழக்கில் வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்த்துக்கொள்ளும் வழிவகைகளை நோக்கியதாக இருக்க வேண்டும். எமது கள யதார்த்தத்தில் இருந்து நாம் சார்பு நிலையை தீர்மானிக்க வேண்டும். கொழும்பு கறுவாத்தோட்டத்து மாளிகைகளில் இருந்தோ யாழ்ப்பாண பல்கலை கழகத்துக்குள் இருந்தோ புலம்பெயர் தேசங்களில் இருந்தோ கிழக்கு மண்ணின் அரசியலை யாரும் தீர்மானிக்க முடியாது.

இந்த நல்லாட்சி அரசாங்கம் வந்ததன் பயனாக இலாபமடைந்தவர்கள் குறிப்பாக மலையக தமிழ் மக்கள் ஆகும். இந்த ஆட்சியில் நிலவுரிமையை பெற்றுக்கொண்டு வீட்டு வசதிகளை பெற்று வருகின்றனர். வெறும் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி இராஜாங்க அமைச்சராக

ஒருவரையும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மூவரையும் கொண்டுள்ளது. அதனால்தான் அவர்களால் மலையகத்தில் ஐந்து புதிய பிரதேச சபைகள் உருவாக்க முடிந்தது. அதனை வைத்துக்கொண்டு அவர்கள் எடுக்கின்ற சார்புநிலைக்கு நியாயம் உண்டு.

அதேபோல எமது சகோதர முஸ்லீம் இனம் சார்ந்த இரு பெரும் கட்சிகள் இந்த ஆட்சியில் ஊருக்கொரு குறுநில மன்னர்கள் போன்று அமைச்சர்களாக உள்ளனர். அதனால் அவர்கள் தமது மக்களுக்கு எத்தனையோ விதமான அரிய சேவைகளை வழங்கி வருகின்றனர். அவர்கள் எடுக்கின்ற சார்பு நிலைக்கும் நியாயம் இல்லாமலில்லை.

ஆனால் கிழக்கு தமிழர்களை பொறுத்தவரையில் இத்தகைய ஒரு சாதகமான அணுகு முறைகளுாடாக எமது சார்பு நிலையை எடுக்கமுடியாத துரதிஷ்டம் கொண்டவர்களாகவுள்ளோம். ஆனால் எமக்கு பாதகம் எது என்பது தெரிந்தால் அதிலிருந்து எமது சார்புநிலையை தீர்மானிக்க முடியும்.

அரசாங்கத்துக்கு உளவு தகவல் அறிவிக்கப்பட்டும் அதை பொறுப்புடன் அணுகாத காரணத்தால் ஈஸ்ட்டர் குண்டுவெடிப்பில் எமது சகோதரர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கி கிடக்க நேரிட்டதே அதை மனதில் கொண்டு இத்தேர்தலில் எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க முடியும்.

புனித சீயோன் தேவாலயத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்த எமது குழந்தைகளின் உயிர் போல எதிர்காலத்தில் எந்த குழந்தைகளின் உயிரும் காவுகொள்ளப் படக்கூடாது என்பதை மனதில் கொண்டு இத்தேர்தலில் எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க முடியும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் 16 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளபோதிலும் கல்முனை உப செயலகத்தை தரமுயர்த்துவதற்காக ஊரைக்கூட்டி உலகை கூட்டி ஒப்பாரி வைக்கவேண்டியுள்ளதே அந்த கையறு நிலையிலிருந்து எமது சார்பு நிலைக்கான நியாயங்களை நாம் தேட வேண்டும்.

இந்த அரசாங்கத்தில் 84 அமைச்சர்கள் இருக்கின்றனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள 45 அமைச்சர்களும். 19 இராஜங்க அமைச்சர்களும், 20 பிரதியமைச் சர்களும் இதில் அடங்குவர்.மலையகத்துக்கு அமைச்சர்கள் உண்டு. முஸ்லிம்களுக்கு அமைச்சர்கள் உண்டு, வடக்கு தமிழர்களுக்கு அமைச்சர்கள் உண்டு.ஆனால் கிழக்கு தமிழனை பிரதிநிதித்துவம் செய்ய ஒரு அமைச்சர்கூட இல்லாத வேதனையை மனதில் கொண்டு எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க வேண்டும்.

வாகரை இல்மனை கம்பெனியால் எமது வளங்கள் காவுகொள்ளப்படுகின்றதே என்று தொண்டை கிழிய ஆர்ப்பாட்டம் பண்ணியும் அதையிட்டு கவலைகொள்ளாத அரசாங்கத்தை மனதில் வைத்து எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க வேண்டும்.

மட்டக்களப்பு பொது நூலக கட்டட நிர்மாண பணிகளை கைவிட்டு நான்கு ஆண்டுகளாக கண்டும் காணாது கல்நெஞ்சுடன் கடந்து சென்ற கயவர்களை மனதில் கொண்டும் யார்வருவார் அதை கட்டிமுடிக்க? என்பதை மனதில் நிறுத்தியும் எமது சார்பு நிலையை நாம் தீர்மானிக்க வேண்டும்.

வேலை வாய்ப்பிலும், நிதி ஒதுக்கிலும் தமிழர்களுக்கு பரபட்ஷம் இன்றி நடந்து கொள்ள எத்தகைய தலைமைகள் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதை எண்ணிப் பார்த்து இந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் எமது சார்பு நிலையை தீர்மானிக்க வேண்டும்.

ஆகவே கிழக்கின் முடிவும் அதன் வழியும் இந்த மண்ணின் வேதனைகளிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் எடுக்கப்படவேண்டும். அதுவே எமக்கான தனி வழியாக இருக்க வேண்டும்.

# ஜனாதிபதி தேர்தலையொட்டி கல்லடியில் மையம்கொள்ளும் மாற்றம்

ஜனாதிபதி தேர்தலுக்கு எண்ணிச் சிலநாட்களே உள்ளன. தேர்தல் வாக்களிப்பு என்பது குறித்த ஐந்து வருடங்களுக்கு மீளப்பெற முடியாத ஆணையாகும். எனவே நின்று நிதானமாக பயன்படுத்தப்பட வேண்டிய ஒரு உரிமையே வாக்குரிமை யாகும். அந்தவகையில் எமது மக்களின் தெரிவானது ஒரு சரியான தலைமையை நோக்கி எடுக்கப்படவேண்டும்.

இத்தகைய தீர்மானங்களை நோக்கி பலவிதமான பிரச்சாரங்களையும் ஒருங்கிணைக்கும் மையமாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்லடி மாறிவருவது ஒரு சுவாரசியமானதொன்றாகும். கிழக்கு மாகாணத்தின் இறுதி நேர அரசியல் மாற்றங்களையும் முடிவுகளையும் தீர்மானிப்பதில் இந்த தேர்தலில் கல்லடியில் இடம் பெற்றுவரும் கூட்டங்கள் பெரும் பங்கு வகிக்கப்போகின்றன. அதேவேளை முன்னாள் முதல்வர் சந்திரகாந்தனின் இறுதிநேர ஆதரவைக்கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தூதுவர் பேரம் பேரம் பேசல்களில் ஈடுபடுமளவுக்கு நிலைமைகள் சூடு பிடிக்கின்றன.

இந்த கல்லடியானது பலவிடயங்களில் மட்டக்களப்பு தமிழகத்தாரின் வாழ்வியலோடு இரண்டறக்கலந்த இடமாகும். எமது அடையாளங்களான பாடும் மீன், கல்லடி பாலம், இராமகிருஷ்ண மிஷன், சாண்டோ சங்கரதாஸ், மாமேதை விபுலானந்தரின் கல்லறை, விபுலானந்தர் இசை நடன கல்லூரி என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

அரசியல் ரீதியாகவும் இந்த கல்லடிக்கு ஒரு வரலாறும் உண்டு. தமிழீழ விடுதலை புலிகளிலிருந்து பிரிந்துவந்த கிழக்கு போராளிகள் ஆயுதங்களை கைவிட்டு ஒரு அரசியல் கட்சியாக பரிணமித்தவேளையில் உருவாகிய தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியானதும் தனது முதலாவது தேசிய மாநாட்டை இந்த

கல்லடியில்தான் நடாத்தியிருந்தது. அந்த மாநாட்டு தீர்மானம் 'கல்லடி தீர்மானம்' என்றே அழைக்கப்படுகின்றது. ஆனால் அது வரலாறுகளில் பெரிதாக சிலாகிக்கப் படுவதில்லை. தமிழ் ஊடகங்கள் செய்திகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவங்களில் தாக்கம் செலுத்தும் யாழ் -மேட்டுக்குடி சிந்தனை முறையே அதற்கு காரணமாகும்.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வடக்கில் அறிவிக்கப்பட்ட மூன்று கட்சிகளின் கூட்டமைப்பானது (தமது 13 அம்ச கோரிக்கைகளை எந்தவொரு வேட்பாளரும் ஏற்றுக்கொள்ளாத நிலையிலும்) சஜித் பிரேமதாசாவுக்கு தமது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளன.

அதேவேளை கிழக்கிலோ வரலாற்றில் ஒரு போதும் இல்லாத வகையில் முதற்தடவையாக அரசியல் தலைமைகள் 13 கட்சிகளை ஒருங்கிணைத்து இந்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஒரு கிழக்கு கூட்டணியை உருவாக்கியுள்ளனர். கல்லடியில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட கோத்தபாய ராஜபக்ஸ வுக்கு முழு ஆதரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழரசு கட்சி தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நான்கு வருடங்களிலும் பேசிப்பேசி அலுத்துப்போன பழங்கதைகளையே மீள ஒப்புவித்து வருகின்றனர்.அதாவது புதிய யாப்பினை கொண்டுவருதல்.அதிகார பகிர்வு என்கின்ற விடயங்களையே அவர்களால் பேச முடிகின்றது.

உலக முரண்பாடுகளின் அடிப்படையே பொருளாதாரந்தான் என்பார் கம்யூனிச தத்துவத்தின் மூலவரான கார்ல் மாக்ஸ் என்னும் அறிஞர். அந்த வகையில் இருவேறு துருவங்களாக இன்று வடக்கும் கிழக்கும் செயற்படுவதற்கும் அடிப்படை பொருளாதார வேறுபாடே காரணம் எனலாம். வடக்கின் பொருளாதாரம் என்பது 'வெஸ்டர்ன் யூனியனை' நம்பியுள்ளது. எமது பொருளாதாரமோ 'விளையுமா வயல்' என்கின்ற நம்பிக்கையில் உள்ளது. எனவேதான் கிழக்கு தலைமைகள் தமது மண்ணுக்கும் மக்களுக்கும் அவசிய தேவையாகவுள்ள கீழ்வரும் விடயங்களை முன்னிறுத்தி கோத்தபாயாவுக்கான ஆதரவு தெரிவிக்கின்றனர் என நாம் நோக்கமுடியும்.

» கிழக்கில் விசாரணையோ பிணையோ இன்றி நான்கு வருடமாக அரசியல் பழிவாங்கல் காரணாமாக சிறைப்படுத்தப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரை விடுதலை செய்தல்.
» காலதாமதமின்றி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல்.
» நான்கு வருடமாக கைவிடப்பட்டு கிடக்கும் மட்டக்களப்பு நகர நூலக கட்டத்தை பூர்த்தி செய்தல்.
» மேலும் பலவீதிகள். பாலங்கள். புதியகல்வி வலையங்கள். புதிய பிரதேச செயலகங்கள். தொழிற்பேட்டைகள். வேலைவாய்ப்புக்கள். உரமானியங்கள். குளங்கள் அவிருத்தி. பெண்கள். முன்னாள் போராளிகள் போன்றோருக்கான மேம்பாட்டு திட்டங்கள் போன்றவை குறித்து பல விதமான வாக்குறுதிகள் கோத்தபாய தரப்பினரால் வழங்கப் பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

கல்லடியில் இடம்பெற்ற கோத்தபாய ஆதரவு கூட்டத்தினை தொடர்ந்து அதற்கு போட்டியாக சஜித்துக்கான ஆதரவு கூட்டமும் கல்லடியிலே நடைபெற்றது. ஆனால் அங்கே தமிழ் தேசிய தலைவர்களோ எம்பிக்களோ மாகாண சபை உறுப்பினர்களோ பிரசன்னமாகவில்லை. காரணம் சஜித்தை ஆதரிக்கும் முஸ்லீம் தலைமைகளோடு தங்களை இனம் காட்டுவதில் அவர்களுக்குள்ள தயக்கமேயாகும். கிழக்கு மாகாண சபையில் மக்களின் ஜனநாயக ஆணைகளுக்கு விரோதமாக முஸ்லீம் காங்கிரசோடு நடத்திய கூட்டாட்சியில் இடம்பெற்ற இனவொதுக்கல்களும் அதன் காரணமாக கிழக்கு மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற மனக்குறைகளையும் எப்படி எதிர்கொள்ளுவதென்பதே கூட்டமைப்பினரின் இந்த தயக்கத்து அடிப்படையானவையாகும்.

அதே போன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வடக்கில் எடுத்த முடிவுகளை கிழக்கில் முன்வைத்து வாக்கு கேட்க முடியாத இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு முழிக்கின்றனர். போலி தேசிய வாக்குறுதிகளை மீண்டும் மீண்டும் மக்கள் முன் வைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இதுபோன்ற காரணங்களால் சஜித் பிரேமதாசாவை முஸ்லீம் தலைவர்களோடு இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பினரால் கல்லடியில் சந்திக்க முடியவில்லை. இக்கூட்டம் முடிந்தபின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமது சார்பு வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை தனியாக சென்று ஹோட்டலில் சந்தித்துள்ளனர். அவர்களது வெளிப்படைத்தன்மையற்ற இந்நடவடிக்கைகள் ஒரு மாபியா கும்பலின் நடவடிக்கைகளை ஒத்தவை என்கின்ற விமர்சனங்களின் எழுந்துள்ளன.

ஆகவே இன்னுமொரு சஜித் ஆதரவு கூட்டத்தை முஸ்லீம் தலைமைகளை தவிர்த்து சம்பந்தர் தலைமையில் இதே கல்லடியில் கூட்டும் வாய்ப்புகளும் உண்டு. சிலவேளை இக்கட்டுரை வெளியாகும் வேளை அது சாத்தியமாகலாம். எனவே எதிர் வரும் தேர்தலில் இந்த கல்லடி படும்பாடு கிழக்கின் அரசியல் வரலாற்றில் ஒரு பாரிய மாற்றத்துக்கு வழிவகுக்கும் சாத்தியங்களை நோக்கி நகருகின்றன.

சுமார் ஏழு வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டதாக மேலே குறித்து காட்டிய கல்லடி தீர்மானத்தின் முதலாவது பிரகடனத்தை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது என்று கருதுகின்றேன். "வடக்கு கிழக்கு பிரதேசங்களை அரசியல் நிருவாக ரீதியாக ஒரே கொள்கையின் கீழ் நிர்வகிக்க முயலுகின்ற கோஷங்கள் கிழக்கு மக்களின் பல்லின சூழலுக்கும்,சுயவிருப்பத்துக்கும், அரசியல் அபிலாஷை மற்றும் இறைமைக்கும் எதிரானது" (கல்லடி தீர்மானம் 12/03/2012) என்கின்றது அந்த பிரகடனம்.

இந்த பிரகடன வார்த்தைகளின் தாற்பரியங்கள் இன்று அதே கல்லடி மேடைகளில் அங்கீகரிக்கப்படுகின்றன என்பது ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று நியதி என்பதை தவிர வேறென்ன?

இந்த நூலில் வரும் கட்டுரைகள் மட்டக்களப்பை, இலங்கையின் கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி பல விடயங்களைப் பேசுகின்றன. கிழக்கிலங்கையின் நலனை, அதன் தற்காலத் தேவைகளை, கிழக்கின் எதிர் காலத்தை மேம்படுத்தும் நோக்குடன் வெளிவந்தது எமது 'அரங்கம்" பத்திரிகை. அதன் நோக்கத்தை உள்வாங்கி கிழக்கின் பலவிதமான அம்சங்களையும் அதில் பேசியவை இந்தக் கட்டுரைகள்.

குறிப்பாக கிழக்குத் தமிழர் அரசியலை, கிழக்கின் அபிவிருத்தியை, கிழக்கின் ஆளுமைகளை, கிழக்குக் காக உழைத்தவர்களை கிழக்கின் எதிர்காலத்தை பேசுகின்றவை இவை. அறுமுக்குட்டிபோடி அவர்கள் ஒரு சிறந்த கட்டுரையாளர். கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், உலக மட்டத்தில் பலவிடயங்களை ஆய்ந்து, அறிந்தவர். கிழக்கில் கிராமம், கிராமமாக அலைந்து அவற்றின் யதார்த்த நிலைமையை உணர்ந்தவர். உலக மற்றும் பிராந்திய நிலைமைகளை கருத்தில் கொண்டு கிழக்கு மாகாணத்தின் எமது மக்களின் தேவைகளை துல்லியமாக முன்வைப்பவர்.

**சீவகன் பூபாலரட்ணம்**

ஆசிரியர் - அரங்கம் பத்திரிகை

ISBN: 978-624-96105-0-7

9 786249 610507